Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ் - 1 ஜனவரி 2008




## கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ........ 1
2. சத்தியம் என்றுமே சத்தியமே ........ 10
3. பெண்கள் பகுதி ........ 12
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?.... 27
8. ஆயிர வருட அரசாட்சி இருக்குமா? ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 21 JANUARY - 2008 Issue - 1


ஆசிரியர் உரை

## கூடாரத்தில் யார்? பர்வதத்தில் யார்?

"**யா**ர்" என்பது ஒரு கேள்வி வார்த்தை. ஒருவர் மற்றொருவரைப் பார்த்துக் கேள்விகள் கேட்கப் பயன்படுவது. இக்கேள்வி வார்த்தையை, தனிப்பட்ட ஒருவரைப் பார்த்தோ அல்லது பலரைப்பார்த்தோ அல்லது ஒரு கூட்டத்தாரைப் பார்த்தோ பயன்படுத்தலாம். அப்படிக் கேட்கப்படும் கேள்விகள் பல நிலைகளில் கேட்கப்பட முடியும். ஒரு காரியத்தைச் செய்தவர் "யார்" என்றோ, ஒன்றுக்குச் சொந்தமானவர் "யார்" என்றோ, ஒரு செய்லைச் செய்ய முன் வருபவர்கள் "யார்" என்றோ, ஒன்றுக்காக விட்டுக் கொடுப்பவர்கள் "யார்" என்றோ இப்படி பலவாறாகக் கேட்கலாம். இவ்வரிசையில், ஒன்றைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தகுதியானவர்கள் யார் அல்லது யார் யார் என்பதையும் நாம் சேர்த்துக் கொள்ள முடியும்.

இப்படி ஒருவர் நம்மைப் பார்த்துக் கேள்வி கேட்கும் போது, அப்படிக் கேட்கப்படும் கேள்விகளுக்கான **பதில்,** நமக்குச் சாதகமானதாகவோ அல்லது நன்மையான்தாகவோ இருந்தால், நான் தான் அல்லது நாங்கள் தான் என்று பதில் சொல்ல ஆவலோடு முன்வருவோம். மாறாக, பதில் பாதகமான தாகவோ, எதிரானதாகவோ இருந்தால் வாய் திறக்கக் கூடத் தயங்கி, தலை தாழ்த்தி ஒதுங்கி நிற்போம். இது, நம்மைப் பார்த்துக் கேள்வி கேட்கப்படும் போது நமக்கிருக்கும் சூழ்நிலையைப் பொறுத்தும், நாம் செய்த செயல் களைப் பொறுத்தும் அமையும்.

சரி, இம்மாதத்திற்கான நமது தலைப்பு கூட "யார்" என்ற கேள்வியோடு தான் உள்ளது. இந்தக் கேள்விகள் நடந்து விட்ட சம்பவத்திற்குப் பொறுப்பு யார் என்று கேட்கப்படாமல், கிடைக்கப் போகும் சிலாக்கியத்திற்குச் சொந்தக்காரர்கள் யார், அவர்கள் எப்படிப்பட்ட தகுதியாம்சங்களை உடையவர்களாக இருக்க வேண்டுமென்ற அளவில் கேட்கப்பட்டுள்ளது. இக்கேள்விகள், சங்கீதக்காரர்களில் ஒருவனாகிய தாவீது எழுதின சங்கீதங்களில் ஒன்றாகிய 15-ம் சங்கீதத்தின், முதல் வசனத்தில் இடம் பெற்றுள்ளது. **கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் வாசம் பண்ணுவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்?** என்று (சங். 15:1). ஒருவேளை, இக்கேள்விகள் தாவீது வாழ்ந்த காலத்தில் கேட்கப்பட்டிருந்தாலும், இன்றைக்கும் இக்கேள்விகள் உயிருள்ள வைகளாயிருந்து நம் ஒவ்வொருவருடைய பதிலையும் பெறத் தகுதியுடையவைகளாகவே இருக்கிறது.

ஆசானின் ஆசாரப்படி, நாம் தெரிந்தெடுக்கும் தலைப்புக்கான பின்னணி பற்றி அலச ஒரு கணிசமான நேரத்தை ஒதுக்குவோம். ஆனால், இந்தக் கேள்விகள் இடம் பெற்றிருக்கும் சங்கீதத்தின் பின்னணி பற்றி ஆழமாக ஆராய போதுமான தடயங்கள் நமக்கு இல்லாமலிருக்கிறது. இருப்பினும் கொஞ்சம் முயன்று பார்ப்போம்.

பொதுவாக, சங்கீதங்கள் என்றாலே, அவைகள் ஒட்டு மொத்தமாக தாவீது அரசனுக்குச் சொந்தமானவை என்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் எண்ணுகின்றனர். ஆனால், உண்மை அப்படி இல்லை. 150 சங்கீதங்களை எழுத தேவன் **ஏழு** தாசர்களைப் பயன்படுத்தியுள்ளார். அவர்களில், கிட்டத்தட்ட பாதி சங்கீதங்களுக்கு உரிமை கொண்டாடும் தகுதி தாவீதுக்கு உண்டு. இந்தப் 15ம் சங்கீதம், சீயோன் மலையின் மீது ஆசாரிப்புக் கூடாரம் ஸ்தாபிக்கப் பட்டதற்குப் பிறகு எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. முந்தின 14-ம் சங்கீதத்தில், ஒரு நீதிமானுக்குக் கிடைக்கும் சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் பற்றி வெகுவாகப் பேசப் பட்டுள்ளது. ஆனால், இச்சங்கீதத்தில் அந்த நீதிமான் யார்? சீயோனுக்குச் சொந்தமாகும் அந்த நீதிமான் எப்படிப்பட்ட தகுதி உடையவராக இருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் விதமாக எழுதப்பட்டுள்ளது.

ஐந்து வசனங்களைக் கொண்ட இச்சங்கீதத்தின் **முதல்** வசனத்தில் இரண்டு கேள்விகள் கேடக்கப்பட்டு, எஞ்சியுள்ள **நான்கு** வசனங்களில் அதற்கான **பத்து** பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பதில்களில், முதல் **மூன்று**, அவர் என்ன செய்வார் என்றும், மீதமுள்ள **ஏழும்** அவர் என்ன செய்யமாட்டார் என்றும் சொல்லுகிறது. கூடாரத்தில் தங்கியிருந்து, பரிசுத்த பர்வதத்தில் வாசமாயிருக்க, ஒரு நீதிமான் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டுமென்ற **மூன்று** காரியங்களை மாத்திரம் இம்மாதத்திற்கான நமது தியானத்திற்காக எடுத்துக் கொள்ள இருக்கிறோம்.

அதற்கு முன்பாக, **கூடாரம் - தங்குவான்** மற்றும் **பர்வதம் - வாசம் பண்ணுவான்** என்பது பற்றிக் கொஞ்சம் விளக்க முற்படுகிறேன். பொதுவாகக் கூடாரம் என்பது நிலைத்த தன்மைக்கு அடையாளமானதல்ல.

நிலையாக ஓரிடத்தில் குடியிருக்க விரும்பும் ஒருவர் கூடாரம் அமைத்துத் தங்கமாட்டார். மாறாக, அடிக்கடி இடம் மாறுவோரே கூடாரத்தைப் பயன்படுத்துவர். ஏனெனில், கூடாரம் என்பது தூக்கிச் செல்ல சுலபமாக இருக்கும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இஸ்ரவேலர்கள் வனாந்திர யாத்திரையில் கூடார வாசிகளாகவே இருந்தனர். (எண் 2:2) தேவனும் கூடார வாசிகளாக இருந்த இஸ்ரவேலர்களின் தொழுகைக்கு, ஆசாரியர்கள் தூக்கிச் செல்லும் வகையில் ஆசரிப்புக் கூடாரத்தைக் கொடுத்தார் (எண் 4:1-49).

சரி, சங்கீதம் 15:1ல் உள்ள **கூடாரத்தை** நாம் **புதிய ஏற்பாட்டு சபைக்கு** ஒப்பிடலாம். எப்படியெனில், சபை என்பது ஒரு கட்டிடத்தைக் குறிக்கும் வார்த்தை அல்ல. இது, சபையாகக் கூடி வரும் விசுவாசிகளைக் குறிக்கும் வார்த்தை. வேத வசனங்களின்படி கிறிஸ்தவர்கள் இப்பூமியில் நிலையற்றவர் களாகவே உள்ளனர். (2கொரி 5:1; 2 பேது. 13,14) அப்போஸ்தலன் பவுலடியார், நம்முடைய (கிறிஸ்தவர்கள்) **குடியிருப்பு பரலோகம்** என்கிறார் (பிலி. 3:20). அப்படியானால், பூமி நிலையானது அல்ல என்பது தானே இதன் பொருள்.

தாவீது அரசன் இந்தக் கூடாரத்தோடு சம்பந்தப்படுத்தியிருக்கும் வார்த்தை **தங்குவான்** என்பது. **தங்குதல்** என்பது ஒரு நிரந்தரத்தைக் குறிக்கும் வார்த்தையல்ல. பட்டணங்களில் "தங்கும் விடுதிகள்" என்று தொங்கும் விளம்பரப் பலகைகளைப் பார்க்கிறோம். யார் அதிலே தங்குவார்கள்? பிரயாணத்தில் இருப்பவர்களோ அல்லது ஒரு குறிப்பிட்ட வேலையினி மித்தம் வெளியூரிலிருந்து வருபவர்களோ தான் தங்குவார்கள். அதுவும் சில நாட்களுக்குத் தான் தங்குவார்கள். மாதக்கணக்கிலும், வருடக் கணக்கிலும் தங்கமாட்டார்கள். அதுபோலவே, சத்தியத்தின்படியான ஒரு கிறிஸ்தவனும், கூடார வாசியைப் போல நிலையற்றவனாக இப்பூமியில் இருந்து, தங்கும் விடுதியில் தற்காலிகமாக இருப்பவர்போல, கிறிஸ்துவால் இரத்தம் சிந்தி சம்பாதிக்கப் பட்ட சபையில் (அப்.20:28) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை மட்டுமோ அல்லது தன்னுடைய மரணம் வரைக்குமோ தற்காலிகமாகத் தங்கியிருப்ப வனாக உள்ளான்.

அடுத்து, **பர்வதம் - வாசம் பண்ணுவான்** என்னும் பதங்களை தாவீது ஆவியின் ஏவுதலால் பயன்படுத்தியிருப்பதை கவனியுங்கள். கூடாரம் என்பதற்கு எதிராகப் "பர்வதம்" என்பது நிலைத்த தன்மையுடையதாக இருக்கிறது. ஒரு பர்வதமோ அல்லது ஒரு மலையோ உலகம் தோன்றியது முதல் அந்தந்த இடத்திலே தான் உள்ளது. சங்கீதக்காரன் இந்தப் பர்வதத்தை "பரிசுத்த பர்வதம்" என்று அழைக்கிறார். ஏனெனில், சீயோன் பர்வதத்தின் மீது தான், தேவாலயம் நிரந்தரமாகக் கட்டப்பட்டது. அத்தோடு தேவாலயம், தேவன் வாசம் செய்யும் இடமாகவும் அன்றைக்கு இருந்தது. ஆகவே தான், அது பரிசுத்த பர்வதம். இந்த **பரிசுத்த பர்வதத்தை நாம் பரலோகத்திற்கு ஒப்பிட முடியும்.** எப்படியெனில், பரலோகம் நிலைத்த தன்மையுடைய ஒன்றாகவும், பரிசுத்த தேவன் இருக்கும் இடமாகவும் உள்ளது.

இந்தப் பரிசுத்த பர்வதத்தோடு தாவீது சம்பந்தப்படுத்தும் வார்த்தை **வாசம் பண்ணுவான்** என்பது. இதுவும், தங்குவான் என்பதற்கு எதிரான வார்த்தையாக உள்ளது. மலைப் பகுதிகளை "கோடை வாசஸ்தலம்" என்று அழைப்பதை நாம் அறிவோம். ஒரு பருவ காலம் முழுவதும் தங்கியிருக்கும் இடமாக அவை இருக்கும். தங்கும் விடுதி போல தற்காலிகமானதாக இருக்காது. கோடை வாசஸ்தலம், "பருவகாலம்" முழுவதும் இருப்பது போல, பரலோகம் "நித்திய காலம்" முழுவதும் இருக்கும் ஒன்றாக உள்ளது. பருவ நிலையிலாகிலும் மாற்றம் இருக்கக்கூடும். ஆனால், நித்திய முடியவில் மாற்றம் என்பதே ஒரு போதும் இருக்காது.

ஆகையால், சங்கீதம் 15:1ல் கேட்டகப்பட்டிருக்கும் கேள்விகள் எங்கே வந்து நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறதென்று பாருங்கள். "கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? என்ற கேள்விகளுக்கான பதில், 15:2ம் வசனத்தில் இப்படியாக உள்ளது. "**உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன் தானே**" என்று. எவ்வளவு அருமையான, அவசியமான தகுதிகளாக இவை உள்ளது. தாவீதைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்தும் இந்தத் தகுதிகள், கர்த்தரராலே அவருடைய சபையில் கிறிஸ்துவின் உபதேசப்படி சேர்க்கப்பட்டு, இப்பூமியில் கிறிஸ்து வரும் வரைக்கும் **தற்காலிகமாக வாழ்வதற்கும்**, கிறிஸ்துவின் வருகையில் அவரால் நியாயந்தீர்க்கப்பட்டு, பரலோகத்தில் பிதாவாகிய தேவனோடும், கிறிஸ்துவோடும், ஆவியானவரோடும் **என்றென்றும் வாழ்வதற்கும்** அவசியமாயிருக்கிறபடியால், இத்தகுதிகள் மூன்றைப் பற்றியும் கொஞ்சம் விபரமாகக் கீழே பார்த்து, நாம் ஒவ்வொருவருக்கும் இத்தகுதிகள் இருக்கிறதா என்று நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம்.

## I உத்தமமாய் நடக்க வேண்டும்

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவர் கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத்தில் நிரந்தரமாக வாசம் பண்ணுவதற்குத் தேவையான முதல் தகுதி, உத்தமமான நடக்கை.

"உத்தமம்" என்பது ஓர் உயரிய குணம். தேவ அங்கீகாரத்தை அப்படியே பெற்றுத்தரும் அருங்குணம். ஏனெனில், தேவன் உத்தம குணத்தில் பிரியப்படுவதாக நாளாகம நூலில் நாம் பார்க்க முடியும். "என் தேவனே, நீர் இருதயத்தைச் சோதித்து, உத்தம குணத்தில் பிரியமாயிருக்கிறீர் என்பதை அறிவேன்...." (1நாளா 29:17). ஆவியானவர் பக்தியாயிருந்த வர்களை யெல்லாம் உத்தமமாக இருந்தார்கள் என்று வேதாகமத்தில் வெளிப் படுத்தாமல், இக்குணத்திற்கென்று, நோவா (ஆதி 6:9) யோபு (யோபு 1:1), காலேப் (எண் 14:24) போன்ற வெகு சிலரை மாத்திரம் அடையாளப்படுத்தி யிருக்கிறார். இவர்களெல்லாரும், இவர்கள் காலத்தில் வாழ்ந்த மற்ற எல்லாரைப் பார்க்கிலும், தேவனை முற்றிலும் சார்ந்த ஓர் ஒப்பற்ற பக்தி

வாழ்க்கையை நடத்திக் காட்டியவர்கள். ஆவியானவர், தாவீதைக் கொண்டு, இது போன்ற ஓர் உத்தம குணம் சபைக்கும், பரலோகத்திற்கும் தேவை என்கிறார்.

ஆனால், அருமையானவர்களே, இப்படிப்பட்ட குணம், நாங்களும் சபையிலே அங்கமாக இருக்கிறோம் என்று கூறிக்கொள்ளும் கிறிஸ்தவ சமுதாயத்திடம் உள்ளதா? இன்னும் சத்தியத்தின்படி கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் கிறிஸ்துவின் சபையாரிடம் உள்ளதா? சொல்லுங்கள். உத்தமமாக நடக்க வேண்டும் என்று கூறுவதை கொஞ்சம் உன்னிப்பாக கவனியுங்கள். உத்தமரைப் போன்ற பேச்சு போதும் என்று கூறவில்லை, உத்தமரைப் போன்ற வேடம், உத்தமரைப் போன்ற தோற்றம் போதும் என்று கூறவில்லை. ஆனால், இன்றைய கிறிஸ்தவ சமுதாயம், தேவன் விரும்பும் உத்தமத்தை, ஆவியானவர் வேத வசனங்களில் போற்றும் இந்த உத்தமத்தைச் சுட்டுத் தின்ற சமுதாயமாக அல்லவா காட்சி தருகிறது. ஆசாரியர்களும், ஜனங்களும் ஏகமாய்க் கெட்டுப் போனார்கள் என்று தீர்க்கதரிசி சொல்லுவது போல (எசே 22:26-29) மேலிருந்து கீழ் வரை அல்லவா புரையோடிப் போயிருக்கிறது. உத்தமத்தைப் பூத கண்ணாடி வைத்துத் தேடினால் கூடத் தென்படாத ஒரு நிலை தானே காணப்படுகிறது! ஒருவேளை, உத்தமரைப் போன்ற பேச்சு வாயிலும், உத்தமர்களைப் போன்ற தோற்றம் உடையிலும், சரீரத்திலும் இருந்தால் போதும் என்று கிறிஸ்தவம் ஏகமாய்த் தீர்மானித்து விட்டதோ?.

ஒருவேளை, பேச்சும், தோற்றமும் போதும் என்று கிறிஸ்தவம் எப்படித் தான் தீர்மானம் போட்டாலும், தேவன் இந்நிலையை ஏற்றுக் கொள்ள மாட்டார். ஏனெனில், உத்தமமான ஒரு தோற்றம் போதும் என்றால், இயேசு இப்பூமியில் வாழ்ந்த நாட்களில், கனிகளற்ற அத்திமரத்தை ஏன் சபிக்க வேண்டும்? (மத். 21:19) கொஞ்சம் சிந்திப்போம்.

தேவன், கறைதிரையற்ற உத்தம நடக்கையை நம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார். ஏதோ கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மிடத்தில் தான் இப்படி தேவன் எதிர்பார்க்கிறார் என்று நீங்கள் எண்ணி விட வேண்டாம். இந்த எதிர்பார்ப்பு முற்பிதாக்களின் காலத்திலிருந்தே தொடர்கிறது. முற்பிதாக்களில் முதலாமவராகிய ஆபிரகாம், தொண்ணூற்றொன்பது வயதாயிருக்கும்போது, தேவன் அவனுக்குத் தரிசனமாகி, "நான் சர்வவல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு **உத்தமனாயிரு**" என்றார் (ஆதி 17:1). தேவன் எதிர்பார்த்தபடியே ஆபிரகாம் உத்தமமாய் நடந்து, விசுவாசிகளின் தகப்பனானான். பக்தன் யோபு நம் மெய் சிலிர்க்கும் அளவு சோதனைகளைச் சந்தித்தும் தன் உத்தமத்தில் உறுதியாய் இருந்துள்ளார் (யோபு 2:9) என்பதை நாம் மறக்கக் கூடாது.

தேவனுக்கு முன்பாக உத்தமமாய் வாழ்கிறவர்களை அவர் கைவிடுவதில்லை. ஆம், "... உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்குகிறார்" (சங். 84:11). மேலும், உத்தமமாய் நடக்கும் ஒவ்வொரு

வரும் இப்பூமியின் வாழ்க்கையில் பத்திரமாய் நடக்கிறான் (நீதி 10:9). பரலோக பாதை மாறாமல், பாதுகாப்பாய் நடக்கிறான். உத்தமமாய் நடக்கிறவர் ஒரு நாளில், எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்க முடியும் (மத் 25:21). இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?

## II நீதியைச் செய்ய வேண்டும்

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவர், கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத்தில் நிரந்தரமாகக் குடியேறுவதற்குத் தேவையான இரண்டாவது தகுதி, நீதி செய்தல்.

உத்தமம் போன்றே நீதி என்பது தேவ குணமாகவும், தேவன் பிரியப்படுகின்ற குணமாகவும் உள்ளது. சங்கீதத்தில் **கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின் மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவைகளை நோக்கியிருக்கிறது** (சங். 11:7) என்றுள்ளது. புதிய ஏற்பாட்டில் எபிரெய ஆசிரியரும் இதே கருத்தை ஆவியானவரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார். **நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்**... (எபி. 1:9) என்று. நம் இயேசுவானவர் இப்பூமியில் இருந்தபோது, நீதியை நிறைவேற்ற வேண்டுமென்பதில் குறியாயிருந்தார். "இயேசு யோவானுக்குப் பிரதியுத்திரமாக; இப்பொழுது இடங்கொடு, **இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது**" என்றார் (மத்.3:15).

அருமையானவர்களே, நீதியின் அவசியம் பற்றி வேதாகமம் இப்படியாகப் பேசும் போது, நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் எப்படிப்பட்டவர்களாக உள்ளோம்? நீதிக்கும், நமக்குமான சம்பந்தம் எந்தளவு உள்ளது? **கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது** என்று பிலி 2:5-ல் பார்க்கிறோம். ஆனால், கிறிஸ்துவோ, எல்லா நீதியையும் நிறைவேற்றுவதில் கவனமாக இருந்துள்ளார் (மத். 3:15). அப்படியானால், நானும், நீங்களும் எப்படியிருக்கிறோம்? சொல்லுங்கள். நீதிக்கு எதிரான வார்த்தை அநீதி. அநீதி என்பது அக்கிரம நடக்கை சம்பந்தமானது. கிறிஸ்துவைப் போன்று நீதியை நிறைவேற்றுவதில் நமக்கு அக்கறை இல்லையானால் நாம் அக்கிரம சிந்தையுடையவர்களாகவே இருப்போம். இந்த வார்த்தை கொஞ்சம் கடினமானதாக இருந்தாலும் உண்மை நிலை அது தான்.

மீண்டுமாக இங்கே கவனிக்க வேண்டியது, நாம் நீதியைப் பேசினால் மட்டும் போதாது என்பது. சங். 15:2-ல், ஆவியானவர், நாம் **நீதியைச் செய்ய வேண்டுமென்றே** கூறுகிறார். புதிய ஏற்பாட்டின்படியான கிறிஸ்தவர்கள், நீதியைச் செய்யும்படியாகவே தேவனால் **சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள்** (எபே 4:24). நீதி, நீதி என்று நாம் பேசும் போது, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய ஒரு வசனப்பகுதி உண்டு. ஆம், அப்போஸ்தலன் பவுல் தான் நேசித்த பிலிப்பி பட்டணத்து சபையாருக்கு இவ்விதம் எழுதுகிறார். "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், **நியாயப்பிரமாணத்**

**தினால் வருகிற சுய நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய் தேவனால் உண்டாயிருக் கிறதுமான நீதியை உடையவனாயிருந்து ....**" என்கிறார் (பிலி. 3:9).

இவ்வசனத்தில், அவர் இரண்டு நீதி பற்றிக் கூறுகிறார். ஒன்று **சுயநீதி** மற்றொன்று **தேவநீதி**. அதாவது, **நியாயப்பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டைக் கைக்கொள்வதால் வருவது சுயநீதி** என்றும், **கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால், கிறிஸ்துவின் உபதேசத்தின் மூலம் வருவது தேவநீதி** என்றும் கூறுகிறார். கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தால் வராத யாவும் பாவமாகவே (ரோமர் 14:23) உள்ளது. ஒருவேளை, அவைகளைச் செய்கிறவர்கள், தாங்கள் செய்கிறவைகளை நீதியானவைகளாக எண்ணிச் செய்து, தங்களை நீதி செய்கிறவர்கள் என்று கூறிக்கொண்டாலும், அப்படிப் பட்ட நீதி, **தேவனுடைய பார்வையில் சுய நீதியாகவே எண்ணப்படும்.**

அப்படியானால், அருமையானவர்களே, பக்தி காரியங்களில் நம்முடைய நீதி எப்படிப்பட்டதாக உள்ளது? அது சுயநீதியா அல்லது தேவநீதியா? கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தாலும், கிறிஸ்துவின் உபதேசத்தாலும் வராத யாவும் பாவமாகவும், சுயநீதியாகவுமே இருக்கு மென்பதை நாம் மறந்து விடக்கூடாது. அது பண்டிகைக் கொண்டாட்டமாக இருந்தாலும், சனிக்கிழமை ஆராதனையாக இருந்தாலும், தசமபாகம் கட்டாயம் என்ற போதனையாக இருந்தாலும், குழந்தை ஞானஸ்நானமாக இருந்தாலும், பாவமன்னிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று இது போன்ற போதகங்கள் எதுவாக இருந்தாலும் அவைகள் சுயநீதியான வைகளாகவே இருக்கும். சுயநீதிக்காரர் களை கர்த்தர் தம்முடைய சபையில் சேர்த்துக் கொள்ளமாட்டார். பரலோகத்தில் அவர்களுக்குப் பங்களிக்கவு மாட்டார். ஆகவே, நாம் ஒவ்வொரு வரும், தேவ நீதியை நம்முடைய வாழ்க்கையில் நடப்பிக்கிறவர்களாயிருக்க, நம்மை நியாயந்தீர்க்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நம்மைக் கீழ்ப்படுத்தத் தீர்மானிப்போம் (யோவா 12:48).

## III மனதாரச் சத்தியத்தைப் பேச வேண்டும்

இப்பூமியின் வாழ்க்கையில் ஒருவர் கூடாரமாகிய சபையில் தற்காலிகமாகத் தங்கியிருந்து, மறுமையில் பர்வதமாகிய பரலோகத்தில் வாசம் செய்வதற்குத் தேவையான மூன்றாவது தகுதி, மனதாரச் சத்தியத்தைப் பேசுதல்.

மல்கியா தீர்க்கன் கூறும் போது, "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்க வேண்டும், வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" (மல். 2:7) என்கிறார். இவர் இங்கே வேதத்தை வாயோடு சம்பந்தப்படுத்துகிறார். ஆனால், நமது தியானப் பகுதியோ, சத்தியத்தை வாயோடு சம்பந்தப்படுத்தாமல், **மனதோடு** சம்பந்தப் படுத்திப் பேசுகிறது. அதாவது, சத்தியம் புறம்பான மனுஷனோடு சம்பந்தமுடையதாயிராமல், உள்ளான மனுஷனோடு சம்பந்தமுடைய

தாயிருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. இக்கருத்து நம்முடைய நாட்களுக்கு அப்படியே பொருந்துகிறதாக உள்ளது. எப்படியெனில், சத்தியம் மனதளவிலும் செயல் அளவிலும் இல்லாமல், வெறும் வாயளவில் தான் பேசப்படுகிறது.

வாயிலே பந்தல் போட்டு ஏமாற்ற நினைப்பவர்களை இயேசு ஆண்டவர் தன்னுடைய மலைப் பிரசங்கத்தில் எப்படிச் சாடியுள்ளார் என்று பாருங்கள். **அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்** என்றார் (மத். 7:22-23).

அன்பானவர்களே, நம்முடைய தேவன் இருதயத்தின் தேவனாக உள்ளார். தள்ளப்பட்ட சவுலுக்குப் பதிலாக இஸ்ரவேலுக்கு ராஜாவைத் தெரிந்தெடுக்கச் சென்ற சாமுவேல் தீர்க்கனிடம் இவ்விதம் கூறினார். "... **நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்**" என்றார் (1சாமு 16:7). ஆம், அவர் இருதயத்தை அறிகிறவராகவும் (சங் 44:21), ஆராய்கிறவராகவும் (1நாளா 28:9) சோதிக்கிறவராகவும் இருக்கிறார் (எரே 12:3). ஆகவே, நம்முடைய பக்திச் செயல்பாடுகளும், சத்தியம் சம்பந்தப்பட்ட காரியங்களும் இருதயத்திலிருந்து வரவேண்டுமென்று தான் எதிர்பார்க்கிறார்.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்பு வாழும் நம் எல்லோரையும் **ஆவிக்குரிய ரீதியில் கட்டுப்படுத்தும் புதிய ஏற்பாடு** "சத்தியம்" என்ற வார்த்தைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. சத்தியம் என்பது **தேவனுடைய வசனம்** என்று விளக்குவதோடு (யோவா 17:17), அந்த சத்தியத்தை அறியும் போது, அது ஒருவனை விடுதலையாக்கும் என்றும் கூறுகிறது (யோவா 8:32). இப்படிப்பட்ட சத்தியத்தை நாம் மனதார நேசிக்கிறவர்களாக உள்ளோமா? சத்தியத்தை மாத்திரம் நேசிக்கிறவர்களாக உள்ளோமா? சொல்லுங்கள்.

நம்முடைய வாழ்க்கையில் நாம் மனதாரச் சத்தியத்தை நேசிக்கிறவர்களாக இருந்தால், **முதலாவது,** நாம் கிறிஸ்துவின் உபதேசப்படி, விசுவாசித்து (மாற் 16:16), மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (அப். 8:37), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று (அப். 22:16) ஆவிக்குரிய விடுதலை பெற வேண்டும். **அடுத்து, நாம் மனதாரச் சத்தியத்தைப் பேச வேண்டும்.** இயேசுவின் பிரதான கட்டளை, அவருடைய சீடர்கள் சத்தியத்தைப் பேச வேண்டுமென்பதே (மத். 28:18-20). பழைய

ஏற்பாட்டின் தானியேல் தீர்க்கன் "ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங் களைப் போலவும் என்றென்றைக்கு முள்ள சதா காலங்களிலம் பிரகாசிப் பார்கள்" (தானி 12:3) என்கிறார். தன் வாழ்க்கையில் சத்தியம் அறிவித்த பவுல், ".... இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (2தீமோ 4:8).

ஆகையால், நாம் மனதாரச் சத்தியத்தை நேசித்து அதற்குக் கீழ்ப்படியும் போது கூடாரமாகிய சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்டு (அப். 2:47) பர்வதமாகிய பரலோகத்தில் வாசம் செய்யும் பாக்கியம் பெற்று, நீதியின் கிரீடம் பெறுவோம். இந்த உண்மைகளை, இப்புதிய ஆண்டில் நாம் உணர்ந்து, நாம் ஒவ்வொருவரும், உத்தமமாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேச தேவன் நமக்கு உதவி செய்வாராக! ஆமென்.

*EZS ராஜநாயகம்*


# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## ஏழாவது பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்

நாள் : **9.02.2008 சனிக்கிழமை**

நேரம் : **காலை 9.30 மணி**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

**சிறப்புச் செய்தி**

சகோ. **சார்லி டி பால்மா** U.S.A.
**Bro. Charlie Di Palma**

சகோ. **ஸ்டேன் ஸ்டாக்டன்**
**Bro. Stan Stockton**

சகோ. **டிம் ஓ பேனன்**
**Bro. Tim O' Banon**

**எக்லீசியா வேதாகமக் கல்லூரி**

த.பெ.எண். 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382, 98428 - 30382

# சத்தியம் என்றுமே சத்தியமே

சத்தியம் என்றால் என்ன? அநேகர் இந்த கேள்வியை கேட்டு விட்டு, சத்தியம் என்று ஒன்று இல்லை, இது தான் சத்தியம் என்று எதையும் கூற இயலாது என்பார்கள். அப்படி கூறுவோர் நாட்டுக்கு நாடு, கலாசாரத்துக்கு கலாச்சாரம் இது வித்தியாசப்படும் என்பர். எது உண்மையிலே சத்தியம் என்பதை அவரவர் தீர்மானிக்கக் கூடுமா? எது சரி, எது தவறு, எதை ஏற்றுக் கொள்வது, அதை தள்ளுபடி செய்வது, எது ஒருவனுக்கு நல்லது - எது ஒருவனுக்குக் கெட்டது என்பதை தீர்மானிப்பது தனிப்பட்ட ஒவ்வொருவரின் தேர்வுக்கு விடப்பட்டிருக்கிறதா?

பரலோகத்தில் ஒரு தேவன் இருக்கிறார் என்றும், அவர் சிருஷ்டி கர்த்தர், அவர் சர்வ வல்லமையுள்ளவர், சர்வ வியாபி, சர்வ ஞானி, எல்லாவற்றையும் காண்கிறவர், கேட்கிறவர், எல்லாரிடத்திலும் அன்பு கூறுகிறவர் என்று நாம் விசுவாசித்தால், நாம் இரட்சிக்கப்பட்டு, நித்திய வாழ்வை அடைய என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பவர்களாக இருப்போம். அவர் நம்மிடம் பொய் சொல்லமாட்டார், ஏமாற்ற மாட்டார், தவறான வழி நடத்தமாட்டார். ஒருவனைப் பார்த்து ஒரு காரியத்தை செய்யச் சொல்லிவிட்டு, மற்றொருவனைப் பார்த்து அதே காரியத்தை வேறுவிதமாகச் செய் என்று கூற மாட்டார். ஒரு கலாச்சாரத்தில் இருப்பவனுக்கு ஒரு செய்தியும், வேறொரு கலாச்சாரத்தில் இருப்பவருக்கு வேறொரு செய்தியும் தரமாட்டார்.

நாம் எல்லோரையும் அவரே சிருஷ்டித்தவர், நாம் யாவரும் பாவிகள் என்பது அவருக்குத் தெரியும். அதற்காகத் தான், அவருடைய குமாரனான இயேசுவை உலகத்திலுள்ள எல்லாருடைய பாவத்திற்காக அவர் மரிக்க அவரை இவ்வுலகிற்கு அனுப்பினார். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமா யிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார் இயேசு.

ஒரே தேவன், ஒரே கர்த்தர், ஒரே ஆவியானவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே சபை, ஒரே நம்பிக்கை உண்டு. (எபேசியர் 4:4-6). ஒரே வழி, ஒரே வாசல், ஒரே சுவிசேஷம், ஒரே அஸ்திபாரம், ஒரே நாமம், ஒரே ஆராதனை, ஒரே நாளில் ஆராதனை, ஒரே பரலோகம், ஒரே நரகம் என்றும் நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றே என்றால் ஒன்று தான். இரண்டல்ல, மூன்றல்ல அதற்கு மேலும் அல்ல. சிலர் சத்தியத்தை தவறாக விளக்கலாம், வியாக்கியானம் பண்ணலாம். அல்லது தள்ளுபடி செய்யலாம். இருப்பினும் சத்தியம் ஒன்று தான். உண்மை உண்மை தான். சத்தியம் சத்தியம் தான் அது மாறாதது. வேதாகமத்தின் மூலம் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். அது தேவாவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2தீமோ 3:16). அது ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. (யோவான் 6:63) ஆகையினால் அது தேவனிடத்திலிருந்து வந்தது. அது தேவனுடைய வார்த்தை. அத்துடன் ஒன்றை கூட்டவோ, குறைக்கவோ, அல்லது மாற்றவோ

கூடாது. அதை அப்படியே விட்டு விட வேண்டும். (வெளி. 22:18,19). மனிதனுடைய தேவைகளை அறிந்து தேவைக்கேற்றவாறு செய்கிறார். மனிதர்களுக்கும் ஒரே வியாதி உண்டு. அதுதான் பாவ வியாதி. தேவன் ஒரே பரிகாரத்தை (மருந்தை) தருகிறார். அது தான் சுவிசேஷம் (மாற்கு 16:15,16).

நாம் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் அறிந்திருக்கிறார். ஒரே காரியத்தை நாம் அனைவரும் செய்ய வேண்டும் என்று கூறி இருக்கிறார். ஒரே வழியில் அவர் நம்மை அனைவரையும் இரட்சிக்கிறார். (அப். 2:38,47). தேவன் பேசி இருக்கிறார் (எபி. 1:1,2). அவர் சத்தியத்தைப் பேசி இருக்கிறார் (யோவான் 8:32). நாம் அனைவரும் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அதையே மற்றவர்களுக்கும் போதிக்க வேண்டும். வானத்தின் கீழே எல்லா சிருஷ்டிகளுக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும், உண்மை யோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று கிறிஸ்து கூறுகிறார் (யோவான் 4:24). கர்த்தருடைய பிள்ளைகளாக நாம் நம் ஆராதனையை நேர்மை யோடும், தாழ்மையோடும் தேவனுக்கு ஏறெடுக்க வேண்டும். மேலும் தேவன் கட்டளையிட்டபடி அல்ல வழி நடத்துகிறபடி ஆராதிக்க வேண்டும். அதற்கு மிஞ்சியோ, குறைவாக இருந்தாலோ அதை தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

கர்த்தருடைய வசனமே சத்தியம், அது பூரண சுயாதீனப் பிரமாணம் (யாக். 1:25). நாம் வசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்ல அதன்படி செய்கிறவர்களாக இருக்க வேண்டும்.

அவர் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை (வெளி 22:13), (மத். 24:35) கடைசி நாளில் அதுவே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). தேவன் பெய்யுரையாதவர். பொய் சொல்லமாட்டார். (தீத்து 1:2, எபி. 6:18). அவர் எப்பொழுதும் சத்தியத்தை அவர் வார்த்தை மூலம் பேசுகிறார். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர் பிரசங்கித்த சுவிசேஷத்தை இன்றும் நாம் அதே சுவிசேஷத்தை பிரசங்கிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அன்று எப்படி அந்த சுவிசேஷம் பாவிகளை இரட்சித்ததோ, இன்றும் அவ்வாறே இரட்சிக்கிறது. அது இன்றும் காலத்தைப் போல நவீனமாகவும், இன்றைக்கும் ஏற்றதாகவும் உள்ளது. அதைப் போல் ஏன் மனிதன் மாற்ற வேண்டும்? அப்படி செய்ய முயற்சி செய்பவர்களுக்கு ஐயோ! கடந்த காலத்தில் தேவனுடைய சத்தியத்தை விட்டு வழி விலகிச் சென்றவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் குறித்து வேதாகமத்தில் நாம் காணலாம். சத்தியம் பொய்யாக மாற்றப்படும் போது, அதைப் பின்பற்றுகிவர்கள் கெட்டுப் போவார்கள்.

ஆகவே, சத்தியம் என்றும் சத்தியமே, தேவனுடைய மனதில் இருந்து நேரிடையாக வந்த கட்டளைகள், உண்மைகள், உண்மையான சங்கதி களாககும். அதை நாம் விரும்பினாலும், விரும்பாமற்போனாலும், அதை ஏற்றுக் கொண்டாலும், தள்ளுபடி செய்தாலும், அது சத்தியமாகவே இருக்கும்.

இந்த சத்தியத்தை விசுவாசிக்கவும், கீழ்ப்படியவும் அதன்படி ஜீவிக்கவும், அதை பிரசங்கிக்கவும், அதை விட்டு விலாகதிருக்கவும், அல்லது அதைக்குறித்து வெட்கப்படாதிருக்கவும், அதே வார்த்தையில் கடைசி நாளில் விசுவாசமுள்ளவர்கள் என்று நியாயந்தீர்க்கப்படவும், நித்திய வாழ்வுக்கு பாத்திரராக இருக்கவும் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக.

**J.C. சோட்**

# தேவன் எனக்கு ஏன் இதைச் செய்தார்?

**"சென்று போன மாதங்களிலும், தேவன் என்னைக் காப்பாற்றி வந்த நாட்களிலும் எனக்கு உண்டாயிருந்த சீர் இப்பொழுது இருந்தால் நலமாயிருக்கும்"**. அப்பொழுது அவர் தீபம் என் தலையின் மேல் பிரகாசித்தது; அவர் அருளின வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன். தேவனுடைய இரகசியச் செயல் என் கூடாரத்தின் மேல் இருந்தது. அப்பொழுது சர்வ வல்லவர் என்னோடிருந்தார்; என் பிள்ளைகள் என்னைச் சூழ்ந்திருந்தார்கள். என் பாதங்களை நான் நெய்யினால் கழுவினேன்; கன் மலைகளிலிருந்து எனக்காக எண்ணெய் நதிபோல் ஓடிவந்தது; (யோபு 29:2-6).

**"இப்போது என் ஆத்துமா என்னில் முறிந்து போயிற்று;** உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்துக் கொண்டது. இராக்காலத்திலே **என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லாதிருக்கிறது."**

"உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்; நீர் எனக்கு மறு உத்தரவு கொடாதிருக்கிறீர்; ... என் மேல் கொடூரமுள்ளவராக மாறினீர்; உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.... நன்மைக்கு காத்திருந்த எனக்கு தீமை வந்தது; வெளிச்சத்தை வரப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இருள் வந்தது. என் குடல்கள் கொதித்து, அமராதிருக்கிறது; உபத்திரவ நாட்கள் என் மேல் வந்தது. வெயில் படாதிருந்தும், நான் கறுகறுத்து திரிகிறேன்; நான் சபையிலிருந்து எழுந்திருக்கும் போது அலறுகிறேன். (யோபு 30:16,17; 20,21; 26-28).

"மாறுபாடானவனுக்கு ஆபத்தும், அக்கிரமச் செய்கைக்காரருக்கு ஆக்கினையுமல்லவோ கிடைக்கும்? அவர் என் வழிகளைப் பார்த்து, என் நடைகளையெல்லாம் எண்ணுகிறார் அல்லவோ? (யோபு 31:3,4).

என்னைப் பகைக்கிறவனுடைய கோபம் என்னைப் பீறுகிறது, என் பேரில் பற்கடிக்கிறான்; என் சத்துரு கொடிய கண்ணினால் என்னைப் பார்க்கிறான். நான் சுகமாய் வாழந்திருக்கிறேன்; அவர் என்னை நருக்கி, என் பிடாரியைப் பிடித்து, என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார். அவருடைய வில்லாளர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்; என் ஈரலைத் தப்ப விடாமல் பிளந்தார்; என் பிச்சைத் தரையிலே ஊற்றி விட்டார். நொறுக்குதலின் மேல் நொறுக்குதலை என் மேல் வரப்பண்ணினார் (யோபு. 16:9, 12-14).

**என் கண் தேவனை நோக்கி கண்ணீர் சொரிகிறது.** ஒரு மனு புத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்காடுகிறது போல, தேவனோடே; மனுஷனுக்காக வழக்காடுகிறவர் ஒருவர் உண்டானால் நலமாயிருக்கும்! குறுகின வருஷங்

களுக்கு முடிவு வருகிறது; நான் திரும்பி வராத வழியே போவேன். என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்த மாயிருக்கிறது (16:20-22; 17:1).

துன்பத்தில் சிக்கித் தவிக்கும் சமயத்தில் அநேகர் இந்த யோபுவைப் போலவே அங்கலாய்க்கின்றனர். **தேவன் எங்கே இருக்கிறார்?** "அவர் எனக்கு ஏன் இப்படி செய்து விட்டார்? **நான் என்ன கெடுதி செய்தேன்? எனக்கு ஏன் இப்படி நேரிட்டது?** "தேவன் ஏன் என் அழுகுரலைக் கேட்டு என் வேதனையை மாற்றிப் போடவில்லை?" **என்னால் தாங்கக் கூடாத துயரம் என்னை வாட்டு கிறதே, எனக்கு இனி நிம்மதியே இல்லையா?** என்று பலவிதமான கேள்விகள் அவர்கள் உள்ளத்தில் எழும்புகிறது.

தேவன் ஏன் மௌனமாய் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று நாமும் பலமுறை **யோபுவைப்** போல (யோபு 1:22) குறை கூறுகிறோம். ஆனால் அது சரியல்ல. ஏனென்றால் எந்தவிதமான துன்பத்திலும், நெருக்கத்திலும் சிக்கித் தவிக்கும் எவருக்கும், தேவன் நிம்மதியையும், ஆறுதலையும் அளிக்கிறார். துயரம், இழப்பு நேரிடும் சமயங்களில் நாம் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும், அவைகளை மேற்கொள்ளும் வழிகளைக் குறித்தும் அவர் நமக்கு ஆலோசனை அளிக்கிறார். வேத வசனங்கள் மூலமாக அவர் நம்மோடு பேசுகிறார்; அவருடைய அளவற்ற அன்பை வெளிப்படுத்து கிறார். வாழ்வின் சுபிட்சமான நேரங்களிலும், துயரமான நேரங்களிலும் அவரை அண்டிக் கொண்டிருப்பதையே அவர் விரும்புகிறார்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா? இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவையும் ஆறு நாட்களில் உண்டாக்கி முடித்த போது "தேவன் தாம் உண்டாக்கின **எல்லாவற்றையும்** பார்த்தார், அது மிகவும் **நன்றாயிருந்தது**" (ஆதி. 1:31) என வேதம் சொல்லுகிறதே. நாசமேயில்லாத, தீங்கில்லாத, துயரங்களில்லாத, மரணமில்லாத ஒரு சுபிட்சமான உலகையே தேவன் ஏற்படுத்தியிருந்தார்.

ஆனால், இவையெல்லாவற்றையும் சீர்குலைக்கும் சதிகாரன் ஒருவன் உண்டென்பதை நினைவில் கொள்ளுங்கள். **அவன் தேவனுக்கு மட்டுமல்ல அவர் படைத்த அன்பின் சிருஷ்டிகள் எல்லாவற்றிற்கும் விரோதி. அவன் தான் சாத்தான்.** உலகத்திற்குள் பாவத்தைக் கொண்டு வந்தவன் அவன் தான். பாவத்தின் விளைவாகவே தேவனுடைய அழகான படைப்பெல்லாம் சீர்குலைக்கப்பட்டு, செயலிழந்து, பேரழிவை நோக்கிச் சென்று விட்டது. ... "சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, ..... மாயைக்கு கீழ்ப்பட்டிருக் கிறது. ஆகையால், நமக்கு தெரிந்திருக்கிறபடி, **இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய் தவித்து பிரசவ வேதனைப்படுகிறது** (ரோமர் 8:20-22).

தனக்கு நேர்ந்த துன்பங்களுக்கெல்லாம் காரணமாயிருந்த கொடுமைக்காரன் யாரென்பதை யோபு புரிந்து கொள்ளாமல் தேவன் இப்படி யெல்லாம் செய்து விட்டாரென்று எண்ணி விட்டான். ஆனால் ஆரம்பத்தி

லிருந்தே சாத்தான்தான் யோபுவைக் குறி வைத்துத் தாக்கிக் கொண்டிருந்தான் என வேதம் சொல்லுகிறது. அவனை அழிப்பதற்காக சூறாவளிக் காற்று, பெரும் தீ விபத்து போன்ற பலவிதமான இயற்கைச் சீற்றங்களை உண்டாக்கி சதி செய்தான்! (யோபு 1:16,19).

இன்றைய உலகில் இயற்கைப் பேரழிவுகள் வாடிக்கையாகி விட்டன. இவைகளுக்கெல்லாம் முழு பொறுப்பாளன், பிசாசானவன் தான். ஒரு வேளை சில சம்பவங்கள் அவனது நேரடிச் செயலாகவும், இன்னும் பல சிலரது தவறுகளின் காரணமாக இயற்கை விதிகள் மீறப்பட்டு நடந்து கொண்டிருந்தாலும், சகல நாச மோசங்களுக்கும் அவன் தான் காரணம் அவன் தேவனுக்கும் அவர் நேசிக்கும் மனிதனுக்கும் மகா விரோதி. நம்மை அழித்து நிர்மூலமாக்குவதே அவனது குறிக்கோள்.

அப்படியானால், "தேவன் சர்வ சக்தி படைத்தவராக இருந்தும் இப்படிப் பட்ட பயங்கரமான சேதங்களை சாத்தான் ஏற்படுத்த அவர் ஏன் அனுமதிக்கிறார்?" என்ற கேள்வி உங்கள் மனதில் எழலாம். ஏனென்றால், மனிதன் தனது சுய விருப்பத்தின்படி வீழ்ந்து பாவ வாழ்க்கையிலேயே நிலைத்திருக்கத் தீர்மானித்தபடியால் இந்த உலகத்தை ஆளும் அதிபதியாக சாத்தானை அவனே நியமித்துவிட்டான். இயேசுவோ இந்த மனிதனுக்கு "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் கிடைக்க ஓர் புதிய வழியை ஏற்படுத்தினார்". (2 பேதுரு 3:13). **அந்த புதிய உலகத்தில் தான்** ஆதி 1:31ல் உள்ளபடி மீண்டுமாக, "எல்லாம் மிகவும் நன்றாய்" இருக்கும். இயேசுவை பின்பற்றும் எல்லோரும் இந்த **நாசமோசம் இல்லாத புதிய பூமியில்** வாழலாம்.

**அப்படியானால் இந்த உலகத்தின் மேல் தேவனுக்கு எந்தவித அதிகாரமுமில்லையா? அல்லது நமக்கு நேரிடுகிற அல்லது வரப்போகிற எந்த ஆபத்தையும் பற்றி தேவன் கவலைப்படுவதில்லையா?** இல்லவே இல்லை! ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்; இயற்கைச் சீரழிவுகளைத் தடுப்பதற்காக, தேவன் இவ்வுலகத்தின் இயற்கை விதிகளை மாற்றியமைக்கப் போவதில்லை. நல்ல கால சூழ்நிலையிலும் சூறாவளிக் காற்று **வீசத்தான் செய்யும்.** அமைதியான சூழ்நிலையிலும் கடும்புயல் **மோதத்தான் செய்யும்.** சற்றும் எதிர்பாராத நேரத்தில் கடும்புயல் மோதத்தான் செய்யும்.

மற்றும் பல துயர சம்பவங்களுக்கு பாவமே நேரடி காரணம். பள்ளி சிறுவர்கள் சக மாணவர்களை கொலை செய்தல், பழங்குடி இனத்தவர் மற்றொரு இனத்தவரை படுகொலை செய்தல், மதுபானம் மற்றும் போதைக்கு அடிமையானோர் நிகழ்த்தும் பலாத்காரம், படுகொலை போன்ற இவைகளுக்கு வேறு யாரை நாம் நொந்து கொள்வது? இதையெல்லாம், பாவத்தின் காரணமாக தடம்புரண்ட இந்த தலை கீழ் உலகில் (சமுதாயத்தில்) நடக்கத்தான் செய்யும்.

மனிதன், தானாகவே கெடுத்து சீரழித்துப் போட்ட இந்த உலகத்தை தேவன் மீண்டும் சீர்படுத்திக் கொடுப்பதால் எவ்வித நிலையான பயனும் இந்த பாவசாபம் மிக்க உலகிலிருந்து தமது பிள்ளைகளை பிரித்தெடுத்து, அவர்களுக்கென்று ஓர் உன்னதமான வீட்டை (வாசஸ்தலத்தை) ஆயத்தப் படுத்திக் கொண்டிருக்கிறார்.

அந்த புதிய வாசஸ்தலத்தினை சென்றடையும் வரை "இவ்வுலகத்தில் தம்முடை பிள்ளைகளுக்கு சகலமும் நன்மையாகவே நடக்கும்" என்று அவர் வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28). அப்படியானால், நம்மைச் சுற்றிலும் ஓர் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு, சேதம் நம்மை அணுகாது என்று பொருளல்ல. நாமும் இந்த சேதம் நிறைந்த உலகின் ஒரு அங்கம் தானே. நமக்கும் துயர சம்பவங்கள், அன்பிற்குரியவர்களின் இழப்பு, வாழ்க்கைப் போராட்டங்கள், ஆபத்து மற்றும் மனவேதனைகள் வர வாய்ப்புண்டு.

ஆனால், நம் **தேவன் நம்மைத் தாங்கி நடத்துவார்.** அதுவுமின்றி "அவரது **ஆவியானவரும்** நமது உள்ளான மனுஷனில் நம்மை வல்லமையால் **பலப்படுத்துவார்.**" - எபேசி 3:16 நமக்கு வரும் இக்கட்டு நேரங்களில் நாம் தேவனுக்கு உண்மையானவர்களாயிருந்தால், சாத்தான் நம்மேல் எய்யும் ஆபத்தான ஆயுதங்களை நமது நன்மைக் கேற்ற கருவிகளாக அவர் மாற்றி விடுவார். "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்பது அவருடைய வாக்குத்தத்தமல்லவா? (எபி 13:5).

தேவன் "நமது பரம தகப்பன்" என்று அறிவோம். உங்கள் பிள்ளை களுக்கு ஒரு ஆபத்தான சூழ்நிலையென்றால் நீங்கள் எங்கேயிருப்பீர்கள்? பிள்ளைகளின் வேதனையை உங்கள் வேதனையாகப் பாவித்து கண்ணீர் சிந்துவீர்களால்லவா? அவர்களை விட்டு விலகாமல், கூடவே இருந்து அவர்களுக்கு துணை செய்வீர்களல்லவா? ஒருவேளை இப்பேற்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் உங்கள் பிள்ளையின் வேதனையைப் போக்க நீங்கள் அருகில் செல்லும் போது, "நீர் தான் என் வேதனைக்கும் பிரச்சனைக்கும் காரணம்" என்று கூறி உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்குமிடையே ஓர் பிளவு உண்டாகுமானால் உங்கள் மனம் என்ன பாடுபடும் என்பதை கற்பனை செய்து பாருங்கள்.

நம்முடைய வாழ்வின் எந்த சூழ்நிலையிலும் தேவன் நமது ஆவிக்குரிய தகப்பனாக, கூடவே இருக்கிறார். இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கண்ட காட்சி உங்களுக்கு நினைவிருக்கிறதா? தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருப்பதாக பல சந்தர்ப்பங்களில் காட்சியளித்த இயேசு, ஸ்தேவான் கல்லெறியப்படுகிற துயர வேளையில் மனம் தாளாது எழுந்து நிற்பதைக் காண முடிகிறதல்லவா? வேதனைகள் நம்மைத் தாக்கும் போது இந்தக் காட்சி நமக்கு மிகுந்த ஆறுதலை அளிக்கும். நம் வேதனைகளை நீக்க இயேசு எழுந்து நின்று, தம் கரத்தை நீட்டி, தம்மால் இயன்றதையெல்லாம் செய்து நமது துயரத்தை நீக்கி விடுவார் என்பது அதிக நிச்சயமல்லவா?

**அவர் எவ்விதம் நமக்கு உதவி செய்கிறார்?** ஒரு அற்புதத்தின் மூலம் அல்ல. ஏனென்றால், தமது ஜனத்திற்கு புதியதொரு பிரமாணத்தை அளிக்கும் போதும், ஒரு புதிய செய்தியாளனை அனுப்பும்போதும் மாத்திரமே தேவன் அற்புதங்களை உபயோகிக்கிறார். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்தே தேவன் பல மகத்தான உதவிகளை தம் ஜனங்களுக்கு செய்திருக் கிறார். சாதாரண ஜனங்கள், அரசாங்கங்கள், சூழ்நிலைகள் மற்றும் சம்பவங் களை, தம்முடைய ஜனங்களுக்கு சரீரபிரகாரமாகவும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் உதவி செய்யும் ஒப்பற்ற கருவிகளாக அவர் பயன்படுத்தி யிருக்கிறார்.

ஆக, இக்கட்டு நேரங்களில் **தம்முடைய மற்ற பிள்ளைகளாகிய** சபையாரின் மனங்களையும், கரங்களையும், உடமைகளையும் துயர் துடைக்கும் கருவிகளாக பயன்படுத்துகிறார். இவர்கள் அவரது குடும்பமாயிற்றே. தம்முடைய பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, பாடுபடும் உலகத்தாருக்கும் சபையின் மூலம் ஒத்தாசை வருகிற, மேலும் நொறுங்கிப்போன அநேக உள்ளங்களைத் தேற்ற அவர், உலகப்பிரகாரமான அரசாங்கம், மருத்துவர்கள், மருத்துவப் பொருட்கள், தச்சர்கள், ஆலோசகர்கள் போன்றவர்களையும் தமது கருவியாகப் பயன்படுத்துகிறார். மறுவாழ்வு பெற்ற அநேகரின் முகங்களில் மீண்டும் புன்னகை தவழச் செய்கிறார். தாங்கள் பெற்ற நன்மைகளுக்காக அவர்கள் அவரை நன்றியுடன் துதிக்கின்றனர்; சாத்தானின் தீங்குகள் எல்லாவற்றையும் நீக்கி, அவன் வாழ்வை ஆசீர்வதிக்க அவைகளைத் தேவன் பயன்படுத்திய போது, முன்பு யோபு விரக்தியில் சொன்ன, "என் சுவாசம் ஒழிகிறது, என் நாட்கள் முடிகிறது; பிரேதக் குழி எனக்கு ஆயத்தமாயிருக்கிறது" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக நிம்மதியும், ஆனந்தமும் அவன் வாழ்வில் இடம் பிடித்தன.

தேவனையோ அல்லது சாத்தானையோ தேர்ந்தெடுக்கும் உரிமையை மனிதனிடம் தேவன் கொடுத்துவிட்டார். எனவே, கஷ்ட காலத்தில் நாம் தேவனுக்கு உண்மையாயிருப்பதும் அவர் பார்வைக்கு சரியானதை செய்வதும் நமது இஷ்டம். அவர் நம்மைக் கட்டாயப்படுத்த இயலாது. ஆனால் நாம் அவருடைய கரத்தை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கும் வரை, எந்த துயர சம்பவங்கள் நம் வாழ்வில் வந்தாலும், அவைகள் தலைகீழாக மாற்றப்பட்டு, நமக்கு நன்மையாகவே முடியும் என்று அவர் ரோமர் 8:28ல் வாக்களித்துள்ளார்.

**இது அவர் அளித்த வாக்குறுதி அல்லவா?**
**அவர் வாக்கு மாறாதவர் ஆயிற்றே!**

- பெட்டி பர்டன் சோட்

## சபை கூடும் போது செய்ய வேண்டியவை

1. ஜெபித்தல் (1தீமோ 2:1)
2. பாடுதல் (எபி 2:12)
3. அப்பம் பிட்டுதல் (அப் 20:7)
4. காணிக்கை (1 கொரி 16:2)
5. பிரசங்கித்தல் (அப். 20:7)

வாலிபர் பகுதி

# ஆவிக்குரிய காரியங்களில் ஆவலாயிருப்போம்

**வா**லிப நெஞ்சங்களே உங்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்றைய நாட்களில் வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் அதிக ஈடுபாடு இல்லாமல் இருப்பதை நாம் காண முடியும். அவர்களுடைய சிந்தனையும், செயலும் சரீரப்பிரகாரமான காரியங்களில் தான் இருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபடுவதற்கு நெகேமியா வாலிபர்களுக்கு நிச்சயமாகவே ஒரு தூண்டு கோலாக இருக்கிறார். முதலாவது நாம் "நெகேமியா" என்கிற வேதாகம கதாபாத்திரத்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். நெகேமியா என்பதன் பொருள் "யெகோவாவின் ஆறுதல்". இந்த நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவுக்கு பான பாத்திரக்காரனாக சேவை செய்து கொண்டிருந்தார். அவர் பெர்சியா நாட்டின் தலைநகராயிருந்த சூசானில் உள்ள அரண்மனையில் இருந்த போதிலும் எருசலேமைப் பற்றியும், அங்கே தேவனுக்கடுத்த காரியங்களிலும் அவர் எப்படி அக்கறை உடையவராக இருந்தார் என்பது பற்றி நாம் பார்க்கலாம்.

**I நெகேமியாவின் துக்கம் :**

நெகேமியா சூசான் அரண்மனையில் பானபாத்திரக்காரனாக பணி புரிந்து கொண்டிருக்கும்போது, எருசலேமில் தன்னுடைய ஜனங்களாகிய யூதர்களைப் பற்றி யூதாவிலிருந்த சில மனிதர்களால் குறிப்பாக தன்னுடைய சகோதரரில் ஒருவனாயிருந்த ஆனானி மூலமாக கேள்விப்பட்டு அதிக துக்கமடைந்தார். இடிக்கப்பட்ட எருசலேம் மதில்கள் கட்டப்படாமல் கிடந்தது இன்னும் அதிக துக்கத்தை அவருக்கு ஏற்படுத்தியது. நெகேமியா 1:1-4 வசனங்களில் நாம் நெகேமியாவின் துக்கத்தையும் இஸ்ரவேலின் துரதிஷ்டமான நிலையையும் காணலாம். இந்த வசனப்பகுதியை நாம் படிக்கும்போது பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இது போன்று இரக்கமும், அக்கறையும் காட்டும் வசனப்பகுதிகள் நம்முடைய நினைவுக்கு வருகின்றன எரேமியா 9:1; ரோமர் 9:1-3. மேலும், இந்த வசனப் பகுதிகள் தேவனுடைய ஜனங்கள் மீதும், தேவனுடைய காரியங்கள் மீது தேவ தாசர்களுக்கு இருந்த அக்கறையைக் காட்டுகிறது. இன்றைய நாட்களில் வாலிபர்கள் கவலை இல்லாத வாழ்க்கை வாழ வேண்டும் என்பதற்காக சந்தோஷத்தை நாடிச் செல்லுகிறார்கள். ஆனால் வாலிபர்கள் அழிந்து போகின்ற ஆத்துமாக்களைக் குறித்து அக்கறை உடையவர்களாக காணப்பட வேண்டும். இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழ்ந்த போது பாடுகள் நிறைந்த

மனிதனாக வாழ்ந்தார் என்று வேத வசனங்களில் நாம் காண்கிறோம். ஏசாயா 53 ஆம் அதிகாரத்தில் நாம் இதைத் தெளிவாக வாசிக்க முடியும். நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவினிமித்தம் பாடுபட்டால், துயரப்பட்டால் நாம் பாக்கிய வான்களாயிருப்போம். நமக்கு பரலோகத்தில் ஆறுதல் உண்டு. இந்த உலகத்திலேயே நாம் ஆறுதல் அடைவோம். சரி, இப்போது நெகேமியாவின் மிகுந்த துக்கத்திற்கான காரணங்களைப் பார்ப்போம். நெகேமியா பெர்சிய ராஜாவாயிருந்த அர்தசஷ்டாவின் பானபாத்திரக்காரனாக பணி புரிந்து கொண்டிருந்தார். அவர் முதன் முறையாக ராஜாவின் சமூகத்தில் துக்கமாயிருந்தார். பெரிய ராஜாவுக்கு சேவை செய்கிறவர்கள் ராஜாவுக்கு முன்பாக முழு சந்தோஷத்துடனே காணப்படவேண்டும், இல்லையெனில் மரணம் அல்லது வேலை இழப்பு போன்ற துரதிருஷ்டமான நிலைக்கு தள்ளப்படுவார்கள். இதை நெகேமியா நன்றாக அறிந்திருந்தபடியால் ராஜா நெகேமியாவைப் பார்த்து "நீ துக்கமாயிருக்கிறது என்ன? என்று கேட்டபோது தான் மிகவும் பயந்ததாக நாம் நெகேமியா 2:2ல் வாசிக்கிறோம். அர்தசஷ்டா ராஜா நெகேமியாவின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தபடியால் நெகேமியாவிடம் பிரியமாகவே இருந்தார். மேலும் நெகேமியா வியாதியாயிருக்கவில்லை என்பதை அறிந்திருந்த ராஜா நெகேமியாவுக்கு ஏதோ மனதின் துக்கம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு காரியம் என்னவென்று மென்மையாக அவரிடம் வினவினார். ராஜாவின் சாந்தமும், இரக்கமும் சம்பாஷணைக்கு வழி வகுத்தது. நெகேமியா பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபித்தப் பிறகு அந்த சம்பாஷனை அல்லது உரையாடல் தொடங்கியது. உண்மையிலேயே இந்த நெகேமியா புஸ்தகம் முழுவதும் நெகேமியா தான் ஒரு ஜெப வீரன் என்பதை நிரூபித்திருக்கிறார். நெகேமியா எருசலேம் பட்டணம் அழிக்கப்பட்டு அதின் மதில்கள் இடிக்கப்பட்டு கட்டப் படாமல் இருந்ததினால் துக்கமாக இருந்தார் என்று பார்த்தோம் அல்லவா? இப்போது எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணியைப் பார்ப்போம்.

## II. எருசலேம் அழிக்கப்பட்டதின் பின்னணி

**முதலாவது** நாம் பாபிலோனிய சிறைப்பிடிப்பின் மூன்று கட்டங்கள் அல்லது எருசலேம் மூன்று முறை கைப்பற்றப்பட்டதை கவனிப்போம்.

யோயாக்கீம் நேபுகாத்நேச்சாருக்கு மூன்று வருடங்கள் சேவை செய்தான். அதன் பின்பு அவருக்கு எதிராக கலகம் செய்தான். நேபுகாத் நேச்சார் எருசலேமை கைப்பற்றி யோக்கீமை கட்டுகளுடன் பிடித்துச் சென்றார். அப்போது சில யூத இளைஞர்கள் (தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ) உட்பட பாபிலோனுக்கு சிறைபட்டுப் போனார்கள். அதுமாத்திரமல்ல, நேபுகாத்நேச்சார் எருசலேம் தேவாலயத்தில் இருந்த பணிமுட்டுகளை எடுத்து பாபிலோனிலிருந்த தன்னுடைய தேவனின் ஆலயத்தில் வைத்தான் (2இராஜாக்கள் 24:1-7) (தானியேல் 1:1-7).

**அடுத்ததாக** யோயாக்கீன் எருசலேமில் மூன்று மாதங்களும், பத்து நாட்களும் ஆட்சி செய்த பிறகு நேபுகாத்நேச்சார் இரண்டாவது முறையாக எருசலேமைக் கைப்பற்றினான். அப்போது அவன் யோயாக்கீன் உட்பட தேவாலயத்தின் சகல பொக்கிஷங்களையும், ராஜாவுடைய அரண்மனையின்

பொக்கிஷங்களையும், தேவாலயத்தில் உண்டாயிருந்த பணிமுட்டுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு பாபிலோனுக்கு சென்று விட்டான் (2இராஜா 24:10-16).

**மூன்றாவது,** நேபுகாத்நேச்சாரின் பத்தொன்பதாம் வருடம், ஐந்தாம் மாதம் ஏழாவது நாளில் அவனுடைய இராணுவ தளபதி நெபுசராதான் எருசலேமுக்கு விரோதமாக அனுப்பப்பட்டான். அவன் தேவாலயத்தையும், ராஜாவின் வீட்டையும் எரித்துப்போட்டான். மேலும் இவர் எருசலேம் பட்டணத்தின் மதில்களை இடித்துப்போட்டான் (2இராஜாக்கள் 25:8-21) இந்த இடிந்து போன மதில்கள் கட்டப்படாமல் கிடந்ததால் தான் நெகேமியா துக்கமாக இருந்தார். இந்த மதில்களைக் கட்டி எழுப்புவதற்கு ராஜாவிட மிருந்து அனுமதி பெற்றுக் கொண்டு எருசலேமுக்குச் சென்றார். நெகேமியா வேலைத் தொடங்குவதற்கு முன்பு ஆயத்த வேலைகளை செய்தார் அது நகரத்தை சோதனை செய்வது உட்பட அநேக காரியங்களை உள்ளடக்கியது (2:12-15). தேவாலயத்தைக் கட்டுவதற்கான பொருள்கள் பற்றி தான் நன்கு அறிந்தவராய் யூதர்களுக்கும், ஆசாரியர்களுக்கும், பிரபுகளுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் வேலையாட்களுக்கும் நன்கு பரிச்சயப்பட்டிருந்தார். மதில்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் போது எத்தனையோ எதிர்ப்புகள் வந்தது அவைகளைக் கண்டு நெகேமியா துவண்டுப் போகவில்லை. மதில்கள் கட்டி முடிக்கப்பட்டபோது **நெகேமியாவின் எதிரிகள் அந்தக்கிரியை தேவனால் கைகூடி வந்ததென்று அறிந்து கொண்டார்கள்.**

## III. நெகேமியாவிடமிருந்து பாடங்கள் :

பொதுவாக தேவனுடைய வேலைகளில் ஒருவர் அக்கறை கொண்டு அதை நடைமுறைப்படுத்த தன்னை ஈடுபடுத்தும் போது சாத்தான் எவ்விதத்திலாவது அவரை சோர்வடையச் செய்வான், எப்படியாவது தேவனுடைய வேலையைத் தடுப்பதில் அவன் கெர்ச்சிக்கிற சிங்கமாக சுற்றித் திரிகிறான். நெகேமியா மதில்களைக் கட்டினபோது சாத்தான் எத்தனையோ தடைகளைக் கொண்டு வந்தான். ஆனால், எல்லா தடைகளையும் தேவனுடைய உதவியால் தகர்த்தெறிந்தார். நெகேமியா பிரச்சனைகள் வந்த போதெல்லாம் அவர் ஜெபித்தார் (நெகேமியா 4:1-5,9); அவர் எதிரிகளோடு சமரசம் செய்து கொள்ளவில்லை. நெகேமியா எதிரிகள் மீது கண்ணை வைத்துக் கொண்டே வேலையாட்களை உற்சாகப்படுத்தி மதில்கள் ஐம்பத்திரண்டு நாட்களில் கட்டி முடிக்கப்படும்படி செய்தார். நெகேமியா என்கின்ற மனிதனுக்குள் காணப்பட்ட ஒவ்வொரு குணாதிசயங்களும் நம் ஒவ்வொருவருக்குள்ளும் காணப்பட வேண்டும். நெகேமியா எப்படி பாழாய்க் கிடந்த மதில்களை கட்டி எழுப்ப மக்களை ஒன்று திரட்டி அவர்களை உற்சாகப்படுத்தி மதில்களைக் கட்டி எழுப்பினாரோ, அதுபோல நாமும் கூட ஜனங்களை தேவனிடத்தில் கொண்டு செல்லும் பணியை மேற்கொள்ள வேண்டும். நமக்கு முன்னால் இருக்கும் பணியை எப்பாடு பட்டாவது செய்து முன்னேறுவோம். கர்த்தருடைய வேலைகளை கூட்டாகச் சேர்ந்து செய்வோம் "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" தேவன் நிச்சயமாக நமக்கு வெற்றியைத் தருவார்.

**பென்னி மார்ட்டின்**

சிறுவர் பகுதி

# கண்களை பிடுங்கி எறிந்து போடு


அன்புள்ள தம்பி, தங்கையரே, உங்கள் அனைவருக்கும் ஏபில் அண்ணாவின் புத்தாண்டு வாழ்த்துக்கள். இந்த 2008ம் ஆண்டு உங்களுக்கு எல்லா வகையிலும் ஆசீர்வாதமாய் இருக்க ஜெபிக்கிறோம். இந்த ஆண்டின் முதல் மாதத்தில் தலைப்பை படித்து பயந்து போய் இருக்கிறீர்களா? பயப்பட வேண்டாம். தேவன் இதிலிருந்து நமக்கு என்ன பாடத்தை கற்றுக் கொடுக்கிறார் என்பதை அறிந்து கொள்ள மிகவும் நிதானமாகப் படியுங்கள்.

உங்களுடைய கண்கள் எவ்வளவு அதிகமான வேலையை செய்கிறது என்று எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? நாம் நினைத்துப் பார்ப்பதை விட மிக அதிகமான வேலையை கண்கள் செய்கின்றது. ஆச்சரியப்படத்தக்க அநேக தகவல்களை தொடர்ந்து சேகரித்துக் கொண்டிருக்கிறது. அத்தோடு பலவிதமான நிறங்கள், வடிவங்கள், ஒளிகள், உருவங்கள், அசைவுகள் போன்றவற்றை உள்வாங்கிக் கொண்டுள்ளது. இப்படியிருக்க, அவைகள் செய்யும் எல்லா வேலைகளுக்கிடையேயும், சில சமயங்களில் பார்ப்பதற்கு நல்லதல்லாத சில காரியங்களை நம் கண்கள் பார்க்க நேரிடுகிறது. தீமையான காரியங்களையும் கூடத்தான். தீமையான காரியங்களை மீண்டும், மீண்டும் பார்க்க நாம் தெரிந்து கொண்டோமானால், பின்பு நாம் தீமையானவைகளை யோசிக்க ஆரம்பித்து விடுவோம். இவ்வகையான சூழ்நிலைகள் கண்களால் பாவம் செய்ய நம்மை இழுத்துக் கொண்டு சென்று விடுகிறது. நிச்சயமாக, ஏதோ இது நம் கண்களால் மட்டும் செய்து விடும் காரியம் அல்ல. மாறாக, நம் மனம் இப்படிச் செய்யச் சொல்லி கண்களைத் தூண்டுகிறது. நம்முடைய மனம் கெட்டுப்போனால், நம்முடைய சரீரத்தையும் பாவமான காரியங்களை செய்யச் சொல்லி வழி நடத்துகிறது. எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும் (மத். 15:18).

ஆகவே, உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்து போடு என்று எந்த அர்த்தத்தோடு இயேசு சொன்னார். இரண்டு கண்ணுடையவனாய் எரி நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மத். 18:9) என்று எதை கருத்தில் கொண்டு சொன்னார்?.

இயேசு சொன்னதின் காரணத்தை இங்கு பார்ப்போம். உனக்கு நலமாயிருக்கும் நமக்கு சிறந்ததை கொடுக்கவே இயேசு விருப்பமுள்ளவராய் இருக்கிறார். நாம் ஜீவனுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்பதில் மிகவும் வாஞ்சையுள்ளவராயிருக்கிறார். எரிநரகத்தில் தள்ளப்படுவதை அவர் விரும்புவதில்லை. நாம் முதலில் பார்த்தபடி நம்முடைய கண்களை கட்டுப்படுத்துவது நம்முடைய மனம். இருதயத்தின் நினைவுகளை

கட்டுப்படுத்த நாம் கற்றுக் கொண்டோமானால், பிறகு நம் கண்களையும், கண்ணினால் பார்க்கும் காரியங்களையும் கட்டுப்படுத்துவோம். இந்தப் பாடத்தைத் தான் இயேசு உண்மையாகவே இங்கு வலியுறுத்தி கூறுகிறார்.



நம்முடைய கண்களை பிடுங்கச் சொல்லுவது அவருடைய நோக்கமல்ல. மாறாக, நம்மையும், நம் நினைவுகள், நோக்கங்கள், விருப்பங்கள் போன்றவற்றை தேர்ந்தெடுக்கும் போது நம் கண்கள் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார். தீங்கான காரியத்தை என் கண்முன் வைக்கமாட்டேன். வழி விலகுகிறவர்களின் செய்கையை வெறுக்கிறேன், அது என்னைப் பற்றாது (சங். 101:3).

ஒருவேளை இந்தக்காரியம் சுலபமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், இதில் உறுதியுள்ளவர்களாய் இருந்தால் வெற்றி பெறலாம்.

எனவே, அன்பு தம்பி, தங்கைகளே, அருமையான பாடம் கற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். உறுதியாய் இருங்கள்.

இம்மாதத்திற்கான மனப்பாட வசனம் **சங்.** 101:3.

**ஏபில் ரோஜர் நாயகம்**

## *நெகேமியாவிலிருந்து பாடங்கள்*

- *ஒருவன் தேவனுடைய ஜனங்களின் வேலையை எதிர்த்தால் அவன் தேவனை எதிர்க்கிறான்.*
- *நல்லவர்களுக்கு கூட சத்துருக்கள் இருக்கிறார்கள்.*
- *சரீரப் பிரகாரமான கட்டிடங்கள் தனிப்பட்ட பக்தியைப் போன்று முக்கியமானதல்ல.*
- *எருசலேமின் மீட்டமைப்பு தேவனுடைய பராமரிப்பிற்கு உதாரணமாயிருக்கிறது.*

தேவன் புதிய ஏற்பாட்டில் விவரித்திருக்கிற ஒன்றான மெய் சபையில் அங்கத்தினராக இருப்பதன் முக்கியத்துவத்தையும், அந்த ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதன் முக்கியத்துவத்தையும் பற்றி சில வசனங்களைப் படித்தோம். நாம் இன்னொரு வசனப்பகுதி யையும் ஆராய்வோம். அங்கே மனித இனத்தின் இரட்சகர் இந்த பாடத்தைப் பற்றி தன்னுடைய எண்ணத்தை தெளிவாகவும், வெளிப்படையாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

மத்தேயு 15:1-13 வசனங்களை நாம் வாசிக்கும்போது அங்கே மத்தேயு இயேசு தம்முடைய நாட்களில் இருந்த மதத்தலைவர்களை கீழ்கண்டவாறு கடிந்து கொண்டதை பதிவு செய்திருக்கிறார்; இயேசு அவர்களைப் பார்த்து மாயக்காரரே என்றழைத்தார்; அவர்கள் தங்கள் பாரம் பரியத்தினால் தேவனுடைய வார்த்தையை எப்படி அவமாக்கினார்கள் என்று சுட்டிக்காட்டினார்; அவர்கள் தங்கள் வார்த்தைகளினால் அதாவது தங்கள் வாயினால் தேவனிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளினால் தேவனை கனம் பண்ணினார்கள் அவர்கள் இருதயமோ தேவனுக்கு தூரமாயிருந்தது என்றும், அவர்கள் மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து தேவனை வீணாய் ஆராதனை செய்தார்கள் என்று பகிரங்கமாக அறிவித்தார்.

அவைகள் எல்லாம் கடுமையான வார்தைகள் அல்லவா? நிச்சயமாக, கர்த்தர் நீங்களும், நானும் அந்த வார்த்தைகளுக்கும் பின்வரும் வார்த்தைகளுக்கும் கூர்மையான கவனத்தை செலுத்த வேண்டும் என்று விரும்புகிறார்..

அடுத்ததாக, நம்முடைய எஜமான் வெளிப்படுத்திய சுவாரஸ்யமான வாக்கியம் பதிமூன்றாம் வசனத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. "என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்". இங்கே இயேசு குறிப்பிட்டிருக்கிற நாற்று பரிசேயர்கள், வேதபாரகர் போன்ற மத அமைப்பு களைக் குறிக்கிறது.

ஆனால் நாற்று என்பது வருங்காலத்தில் மனிதர்களால் ஸ்தாபிக்கப் படப் போகும் வேறு மத பிரிவுகளைப் பற்றி அவர் அப்போது குறிப்பிட்டி ருக்க சாத்தியம் இருக்கிறதா? இன்றைய நாட்களில் நம்மைச் சுற்றிலும் உள்ள பிரிவினை சபைகளைப் பற்றி அவர் குறிப்பிட்டிருக்கக் கூடுமோ? இயேசு சொன்னது மிகச் சரியானது தான் என்பதில் என் மனதில் எள்ளளவும் சந்தேக மில்லை!.

நம்முடைய அருமை இரட்சகர், சர்வ வல்லமையுள்ள தேவனால் நடப்படாத (ஸ்தாபிக்கப்படாத) ஏதோ ஒரு மதப் பிரிவினைப் பற்றிப் பேசுகிறார்! அது நிச்சயமாக இயேசு அல்லாமல் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மார்க்கப் பிரிவினைகளைக் குறிக்கும்.

நாம் இந்த பாடத்தை படிக்கையில் அன்புடனும், தாழ்மையுடனும் அந்த மதப் பிரிவுகளில் பெரும்பாலானவைகளை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்.

மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மார்க்கப் பிரிவினையையும் தேவன் என்ன செய்வார்? அப்படிப்பட்ட நாற்றுகளை அவர் பிடுங்கிப்போடுவார். ஒரு நாற்று பிடுங்கப்படும் போது அதற்கு என்ன நடக்கிறது? நிச்சயமாகவே அத செத்துப்போகிறது! இங்கே நம்முடைய இரட்சகரின் கருத்து என்ன? மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு மார்க்கப்பிரிவினையும் தேவனிடத்திலிருந்து நித்தியமாக பிரிக்கப்படும்! பிரியமானவர்களே, இது உங்களுக்கு அதிர்ச்சியையூட்டு கிறதா? இது உங்களை அச்சுறுத்துகிறதா? அந்தக் கடுமையான வார்த்தைகள் என்னை அச்சுறுத்துகிறது எனக்கு அதிர்ச்சியாயிருக்கிறது என்பதை தயவு செய்து நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

எஜமானிடத்திலிருந்து வந்த அந்த உருவக்குத்துகிற வார்த்தைகள் அவருக்கான தீவிரமான அன்புடன் அவர் ஏற்படுத்தின ஒன்றான மெய் சபையின் அங்கத்தினர் என என்னை அடையாளம் காட்டுவதற்கு என்னை ஊக்கப்படுத்துகிறது! இயேசுவின் வார்த்தைகள் உங்களிலும் இவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என நான் ஜெபிக்கிறேன்.

ஆனால், சிலர் அப்படிப்பட்ட மார்க்கப்பிரிவினை சபைகள் அல்லது அமைப்புகளில் **தலைவர்கள்** மாத்திரம் தான் தேவனிடத்திலிருந்து நித்தியமாக பிரிக்கப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். இயேசு அப்படித் தான் சொன்னாரா? பதினான்காம் வசனத்தை விவரமாக ஆராய்ந்து பாருங்கள். இயேசு இங்கே யாரைக் குறிப்பிடுகிறார்?

நிச்சயமாகவே இயேசு மதத்தலைவர்களைப் பார்த்து அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள் என்று சொன்னார்.

இயேசு ஏன் மதத்தலைவர்களைப் பார்த்து குருடர்கள் என்று சொன்னார்? இந்தப் பாடத்தைப் பற்றியும் வேறு பாடத்தைப் பற்றியும் தேவனுடைய சித்தம் என்ன என்பதை தீர்மானம் செய்ய புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக ஆராய தங்கள் சரீர மற்றும் ஆவிக்குரிய கண்களை திறக்க மறுத்துவிட்டார்கள் என்பதை நிரூபிக்க இயேசு மதத்தலைவர்களைப் பார்த்து குருடர்கள் என்று குறிப்பிட்டார்.

ஆனால், இயேசு குருடருக்கு வழிகாட்டுகிற குருடர்களை மட்டு மல்லாமல் வேறு யாரையோப் பற்றியும் பேசுகிறார் அவர்களைக் குருடர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார் அவர்கள் யார்? அவர்கள் பல நூற்றாண்டுகளா மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற மார்க்கப்பிரிவினைக் கூட்டத்தின் தலைவர்களைப் **பின்பற்றுபவர்கள் தான்.**

அப்படிப்பட்ட ஜனங்களைப் பார்த்து இயேசு ஏன் குருடர்கள் என்று அழைக்கிறார்? மறுபடியும் தேவனுடைய சித்தத்தை தீர்மானிக்க புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக ஆராய தங்கள் கண்களைத் திறக்க அவர்கள் மறுத்ததால் தான் இயேசு அவர்களைப் பார்த்து குருடர்கள் என்றழைத்தார்.

நாம் எந்த மனுஷனையோ அல்லது மனுஷியையோ குருட்டுத் தனமாக பின்பற்ற வேண்டாம். மாறாக நீங்களும், நானும் ஒவ்வொரு பாடத்தைப் பற்றியும் தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை கற்றுக் கொள்வதற்காக அனுதினமும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:11)

இப்போது இதை மிக ஜாக்கிரதையாக கவனியுங்கள். இப்படிப்பட்ட மார்க்கப்பிரிவினைக் கூட்டங்களில் குருடரான தலைவர்களுக்கும், அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் என்ன நடக்கும்? தலைவர்களும், அவர்களைப் பின் செல்பவர்கள் இருவருமே குழியில் விழுவார்கள் என்று நம்முடைய அருமை இரட்சகர் சொன்னார்! குழியில் விழுவது என்பது செய்வதற்கு பயங்கரமான காரியமாகும்!

இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பயன்படுத்திய போது என்ன பொருள்படி இயேசு சொன்னார்? பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் என்று என்ன பொருள்படும்படியாக சொன்னாரோ அதே பொருளில் தான் இந்த வார்தைகளையும் பயன்படுத்தியிருக்கிறார். அதாவது, தவறான மதங்களின் தலைவர்களும், அவர்களைப் பின்பற்றத் தெரிந்து கொள்பவர்களும் பரலோக சந்தோஷங்களிலிருந்தும், தேவனிடத்தி லிருந்தும் நித்தியமாகப் பிரிக்கப்படுவார்கள். அதன் பொருள் என்ன வென்றால் நரகத்திலே அக்கினி ஜுவாலையிலே தங்கள் நித்தியத்தை கழிப்பார்கள் என்பதாகும்.

அது நினைத்துப்பார்ப்பதற்கே பயங்கரமாயிருக்கிறது! ஆயினும் இந்த வார்த்தைகள் எங்களிடமிருந்து புறப்பட்டு வருகிற வார்த்தைகள் அல்ல மனித இனத்தின் மீட்பர் அந்த வார்த்தைகளைச் சொன்னார் அதை தேவ ஆவியினால் ஏவப்பட்ட தீர்க்கதரிசியான மத்தேயு பதிவு செய்திருக் கிறார் அதைத்தான் நாங்கள் உங்களுக்கு மேற்கோள்காட்டு கிறோம்.

இதுவும் நாம் ஏன் இயேசு தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்த சபையை அடையாளம் கண்டு அந்த சபையின் உண்மையுள்ள உறுப்பினராக இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்களுள் ஒன்றாக இருக்கிறது.

இந்த வேளையில் தேவன் தம்முடைய வசனங்களில் வெளிப்படுத் தியிருக்கிற காரணங்களையெல்லாம் திரும்பச் சென்று சுருக்கமாக பார்ப்பது அவசியமானது என்று நம்புகிறேன். அதைக் கீழ்கண்டவாறு பார்ப்போம். இயேசு அந்த சபையை ஆத்துமாவை சுத்திகரிக்கக்கூடிய தம்முடைய இரத்தத் தினால் வாங்கினார்; கிறிஸ்து அந்த சபையில் அன்பு கூர்ந்து அதற்காக தம்முடைய ஜீவனையே விட்டார்; தங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கப் பட்டவர்களை கர்த்தர் அந்த சபையில் சேர்க்கிறார்; அந்த சபை இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பொக்கிஷங்களைக் காட்டிலும், பணத்தைக் காட்டிலும் விலையேறப் பெற்றது என்று தேவன் விவரித்திருத்திருக்கிறார்; அந்த சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது அவரே அதற்குத் தலையாயிருக்கிறார்; கிறிஸ்துவின் சபையாகிய அந்த ஆவிக்குரிய சரீரத்தில் தான் தேவன் எல்லா ஆவிக்குரிய வசனங்களையும் வைத்திருக்கிறார். அந்த ஒரே ஆவிக்குரிய சரீரத்தில் தான் நாம் தேவனோடு ஒப்புரவாக முடியும்; அந்த ஒரே சரீரத்தின் மூலமாக தான் நீங்களும் நானும் தேவனை மகிமைப்படுத்த

வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்; அவருடைய ஒன்றான மெய் சபைக்கு இயேசுவே இரட்சகராயிருக்கிறார்; அந்த சபை தான் தேவனுடைய ஆவிக்குரிய போராட்டத்தைப் போராட பொறுப்புள்ளதாயிருக்கிற கர்த்தருடைய சேனையாயிருக்கிறது; இயேசு வரும்போது இந்த சபையை தான் அவர் பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுப்பார் இந்த பரலோகத்தில் தான் இந்த கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர்கள் தங்கள் நித்தியத்தை கழிப்பார்கள்; இயேசு தம்முடைய சபையின் நடுவிலிருந்து சபையை போஷித்து காப்பாற்றுகிறார்.

தேவன் தம்முடைய வார்த்தைகளில் சபையைப் பற்றி இவ்வளவு கருத்துக்களைக் கூறியிருக்கும் போது ஒரு மனுஷனோ அல்லது மனுஷியோ சபை எப்படி முக்கியமற்றது என்று சொல்ல முடியும்? அப்படிச் சொல்வது தேவன் மேற்கூறிய வசனங்களில் சொல்லியிருப்பவைகளுக்கு எதிரான தேவ தூஷணமாகும்.

இப்போது கிறிஸ்துவின் மதிப்பையும், அந்த சபையை புதிய ஏற்பாட்டு மாதிரி மூலமாக எப்படி மற்ற மார்க்கப் பிரிவினைக் கூட்டத்திலிருந்து வேறுபடுத்தி, அதை அடையாளம் கண்டு அதில் இருப்பதற்கான நித்திய முக்கியத்துவத்தை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். சுருக்கமாக, அந்த மாதிரியில் இயேசுவின் ஒன்றான மெய் சபையை அடையாளம் கண்டு கொள்வதற்கென கீழ்காணும் குணாதிசயங்களை தேவன் குறிப்பாக சொல்கிறார்.

A. அதன் ஸ்தாபகர் அல்லது அதைக்கட்டினவர் : இயேசு கிறிஸ்து எந்த மனிதனும் அல்ல.

B. அதன் காலமும், ஸ்தாபிக்கப்பட்ட இடமும் : கி.பி. 30 எருசலேமில்

C. அதன் பெயர் : புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபை என்று குறிப்பிடப் பட்டிருக்கிற ஒரே சபை

D. அதன் ஆராதனை : ஜெபம், தேவனுடைய வார்த்தையைப் படிப்பது

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவது, கர்த்தருக்கென்று காணிக்கை கொடுப்பது, இசைக்கருவிகள் இல்லாமல் பாடல்கள் பாடுவது ஆகியவைகளை உள்ளடக்கிய ஆவியோடும், உண்மையோடும் ஏறெடுக்கப்படும் ஆராதனை.

E. அதன் ஆளுகை அமைப்பு : சுலபமானது, இயேசுவை தலைவராகவும், தேவனுடைய தகுதியம்சங்களுக்கு உட்ப்படும் மூப்பர்கள் பிராந்திய சபையை கண்காணிக்கிறவர்களாகவும், அந்த மூப்பர்களுக்கு கீழே உதவிக்காரர்களாகவும் சபையின் ஆளுகை அமைப்பு இருக்கிறது. ஒவ்வொரு சபையும், தன்னிச்சையானதும், சுயச்சார்புடையதும், சுய ஆளுகையுள்ளதாயும் இருக்கிறது.

F. அதன் ஊழியம் : சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது மூலமாக ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது, சபையைப் பலப்படுத்துவது, ஏழைகளுக்கு உதவி செய்வது, தேவனுடைய வார்த்தையைத் தாங்குவது போன்றவைகளாகும்.

அதன் ஒரே ஒரு அதிகார அளவுகோல் : தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய புதிய ஏற்பாடுதான் இந்த புதிய ஏற்பாடு தான் இன்று நமக்கு சட்டமாக இருக்கிறது இதில் தான் நாம் எப்படி கிறிஸ்தவன் ஆவது என்றும், எப்படி ஒரு கிறிஸ்தவனாக வாழ்வது என்றும், தேவனை எப்படி சரியாக ஆராதிப்பது என்றும் கற்றுக்கொள்கிறோம்.

நீங்கள் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கப்பிரிவினை சபைகளில் ஒன்றில் அங்கத்தினராயிருக்கிறீர்களா? இங்கே உங்களுக்கு ஒரு தாழ்மை யான, அன்பான, உறுதியான வேண்டுகோள் அந்த சபையிலிருந்து **இன்றே** நீங்கள் வெளியே வந்து இயேசுவினிடத்திலும், பிதாவினிடத்திலும் விசுவாசம் வைத்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதற்கேதுவான தேவனுக்கேற்ற துக்கம் உடையவர்களாய், மற்றவர்களுக்கு முன்பாக உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தை அறிக்கை செய்து, உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவ மன்னிப்பைப் பெற ஞானஸ்நானம் பெறும் போது கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையில் நீங்கள் அங்கத்தினராகிறீர்கள். நீங்கள் அதைச் செய்யும் போது, தேவன் உங்களை அந்த ஒன்றான மெய் சபையில் சேர்த்துக்கொள்வார்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

## நாளும் நடப்பும்

1. தமிழகத்துக்கு 800 மெகாவாட் மின்சாரம் ரிலையன்ஸ் வழங்குகிறது.
2. பேநசீர் படுகொலை, ஸ்காட்லாந்து போலீஸ் புலன் விசாரணையை தொடங்கியது.
3. நாகை மாவட்டத்தில் கனமழை 32 ஆயிரம் ஹெக்டேர் சம்பா பயிர்கள் தண்ணீரில் மூழ்கின.
4. இஸ்ரவேல் ராக்கெட் தாக்குதல் 11 பாலஸ்தீனியர் சாவு.
5. இலங்கயைில் தொடர்ந்து விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் சண்டை 17 புலிகள் சாவு.
6. ஒரு குழந்தைக்கு மேல் பெற்ற 1 லட்சம் பேருக்கு சீனாவில் தண்டனை.
7. கிரிக்கெட் சிட்னி போட்டியின் பாரபட்ச முடிவால் அம்பயர் ஸ்டீவ் பக்னர் நீக்கம்.

# வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் கிறிஸ்துவின் அன்பான நாமத்திலே வாழ்த்துகிறோம். சுகமாயிருப்பீர்களாக. நமது செய்திக்குரிய வசனப்பகுதி மீகாவின் புத்தகத் (மீகா 6:8) தில் உள்ளது.

"மனுஷனே நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக் கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் **வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்**".

"மீகா" என்பதற்கு **யெகோவாவாகிய தேவனுக்கு நிகரானவர் யார்?** என்று பொருள். இந்த தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்த "யூதா" ஜனங்களின் நிலை மிகவும் தேவனுக்கு எரிச்சல் மூட்டக்கூடியதாக இருந்தது.

(1) நியாயாதிபதிகள் பரிதானம் வாங்கினர் (மீகா 3:11)

(2) **ஆசாரியர்கள் கூலிக்கு** உபதேசிக்கிறார்கள் (மல்கியா 2:7) ஆசாரியனின் உதடுகள் அறிவைக் காக்க வேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே. அவன் சேனைகளின் கர்த்தரின் தூதன். இவர்களை தேவன் எவ்வளவு உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளார். ஆனால் இவர்கள் காசு கொடுப் போருக்கும் கைக்கூலிகளாக மாறியிருந்தனர். (3) **பிரபுக்கள்** ஜனங்களின் கூலியை வஞ்சித்து, எளியவர்களின் சொத்துக்களை அபகரித்தும் ஐசுவரியத்தின் மயக்கத்தில் தேவனை மறந்தும் நடந்து கொண்டனர். (4) தேசத்து **ஜனங்களென்ன** இவர்களுக்கு சளைத்தவர்களா? பொருளாசை இழிவான ஆதாயத்தை இச்சிப்பது என சகல பாவத்திற்கும் தங்களை அடிமைப்படுத்தியிருந்தனர். இவர்கள் எப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளை விரும்பினர்.

மீகா 2:11 "**மனம் போகிற போக்கின்படிபோய் அபத்தமானதை உரைக்கிற ஒருவன், திராட்ச ரசத்தையும் மதுபானத்தையுங் குறித்து நான் உனக்குப் பிரசங்கிப்பேனென்றால் அவனே இந்த ஜனத்திற்கு ஏற்ற பிரசங்கியாய் இருப்பான்**" "ஆஹா, சபாஷ் என்ன அருமையான தேசம், என்ன அருமையான மக்கள் பார்த்தீர்களா? இவர்களால் தேவனுடைய நாமம் மகிமைப்படுவதெப்படி?" ஆதலால் தான் இந்த ஜனங்களை அசீரியர்கள், பாபிலோனியர்கள் என்ற ஜனங்களிடம் அடிமைகளாக ஒப்புக் கொடுத்தார்

மீகா 3:12 "**எருசலேம் மண்மேடாயிற்று, அந்தோ பரிதாபம்**". இந்த நிலையில் தான் மீகா கொண்டு என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனமே உன்னிடம் நான் எதிர்பார்ப்பது என்னவென்றால்?

**A) நியாயம் செய்யுங்கள்**

எது நியாயம் (நீதி) உபாகமம் 32:4 அவர் வழிகளெல்லாம் நியாயம் (சங் 119:172) உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள். அநேக மாயிரம் பொன், வெள்ளிகளைப் பார்க்கிலும் வேதத்தை அறிந்து அதன்படி வாழ்வதே நலம் (சங். 119:72) உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாய் இருக்கிறது (சங். 119:105) பரலோகத்தின் தேவன் அவருடைய பரிசுத்த வேதத்தை மனுக்குலத்திற்கு தந்து வாழும் வழியை கற்றுத் தந்திருக்கிறார். நாம் நமது சுய புத்தியை விட்டு விட்டு (ஏசாயா 35:8) அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும். அது பரிசுத்த வழி எனப்படும். தீட்டுள்ளவன் அதிலே நடந்து வருவதில்லை; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராய் இருந்தாலும் திசை கெட்டுப் போவதில்லை. நாம் சத்தியத்தின் படி நம் வாழ்க்கையை அமைத்து கொள்வோம். ஆதலால், பிரியமானவர்களே! கர்த்தரை தெய்வமாகவும், கிறிஸ்துவை தங்களுக்கு இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் மற்ற அஞ்ஞானிகளைப் போல தந்திரமாகவும், நேர்மையற்ற முறையில் பொருள் சேர்ந்து அதிலே பிழைக்க வேண்டிய அவசியம் நமக்கில்லை (நீதி 22:4). தாழ்மைக்கும் கர்த்தருக்குப் பயன்படுத்தலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும், மகிமையும், ஜீவனுமாம். தேவனுடைய வழியிலே நாம் நடப்பதே நீதியும், நியாயமுமாம், நியாயத்தை செய்யுங்கள்.

**B) இரக்கத்தை சிநேகியுங்கள்**

நமதாண்டவர் வேதபாரகர்களையும், பரிசேயர்களையும் வெகுவாக கடிந்து கொண்டார் (மத். 23:23). ஏனெனில், அவர்களிடம் பக்தி இருந்தது ஓய்வு நாளை வைராக்கியமாக கைக்கொண்டனர். தாராளமான காணிக்கை களை கொடுத்தனர். ஆனால், நியாயப் பிரமாணத்திலே கற்பித்திருக்கிற விஷேசித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள். தேவனிடத்திலும் விசுவாசமாய் இருக்க வேண்டும், நம்மைப் போலவே தேவன் மற்ற மனிதர்களையும் உண்டாக்கினார் என்றெண்ணி நீங்கள் சக மனிதர்களிடமும் இரக்கம் காட்ட வேண்டும்.

லூக்கா 10ல் 27-37 ஒரு மனுஷன் எருசலேமிருந்து எரிகோவிற்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான். அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்து கொண்டு அவனைக் குற்றுயிராய் விட்டுப்போனார்கள். அப்பொழுது அந்த வழியாக வந்த ஆசாரியன், லேவியன் ஆகியோர் பக்கமாய் விலகிப் போனார்கள். இவர்கள் தேவனிடம் மிகுந்த பக்தியுள்ளவர்கள் அதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனால், தன்னைப் போன்ற ஒரு மனிதன் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கண்டும் காணாதபடி ஒதுங்கிப் போவதுதான் தேவன் கற்பித்த பக்தியா? எது சுத்தமான பக்தி (யாக்கோபு 1:27) விதவைகளும் திக்கற்றவர்களும் படுகிற உபத்திரவத்தில் உதவுவதுதானே! 2 நாளாகமம் 7:5. ராஜாவாகிய சாலமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும் லட்சத்திருபதி னாயிரம் ஆடுகளையும் தேவாலய பிரதிஷ்டையின் போது செலுத்தினான். ஆனால் தேவன் பலிகளைவிட இரக்கத்தையே விரும்புகிறார் (மத். 9:13,

மத்12:7) தேவனுடைய பிள்ளைகள் தேவனிடம் பக்தியாக இருப்பது மிகவும் சிறந்த விஷயம். ஆனால், நாம் நம்மைப்போல பிறரை நேசித்து இரக்கம் பாராட்டுவது இன்னும் சிறந்த பக்தியாக இருக்கும். 1 யோவா 4:20 காண்கிற சகோதரனிடம் அன்பு செலுத்த முடியாதவர்கள் காணாத தேவனிடம் அன்பு செலுத்த முடியாது (சங். 86:15) ஆனாலும் ஆண்டவரே, நீர் மன உருக்கமும், இரக்கமும் நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுள்ள தேவன் **"பிறர் மீது அன்று செலுத்தும் போதுதான் நம்மீது தேவன் எவ்வளவு அருமையான பொறுப்புகளை தந்திருக்கிறார் என்பது புரியும்"**

**C) <u>மனத்தாழ்மையாய் நடந்து கொள்வோம்</u>**

நம்மில் அநேகருக்கு இந்த உலகில் நம் தினசரி வாழ்வை நன்றாய் அமைத்துக்கொள்ளும் அறிவு நிறையவே உண்டு. எந்த சீசனில் எந்தப் பொருள் வாங்கினால் விலை குறைவாக இருக்கும் எனத் தெரியும். தங்கம் எங்கே வாங்கினால் தரமானதாக இருக்குமெனத் தெரிகிறது. நம் பிள்ளைகளை எங்கே? என்ன படிப்பு படிக்க வைத்தால் எதிர்காலம் சிறப்பாக இருக்குமெனத் தெரியும். **ஆனால் நம்மை உண்டாக்கின தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடப்பது என்பதை நாம் எங்கே? கற்றுக்கொள்வது?** பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது? **எரேமியா 10:23 கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும் தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்.** பிரியமானவர்களே, நீதிமொழிகள் 16:2 **மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்கு சுத்தமானவைகள் கர்த்தரோ ஆவிகளை நிறுத்துப் பார்க்கிறார்** (நீதி 14:12) நமக்கு செம்மையானது மரண வழியாக கூட இருக்கும்.

**மனத்தாழ்மையென்பது என்ன?** (ஆதி. 13:5-6) ஆபிரகாமின் ஆஸ்தியும், லோத்தின் ஆஸ்தியும் மிகுதியாய் இருந்தது பூமி தாங்கக் கூடாத அளவிற்கு இருந்தது. ஆனால், அந்த ஆபிரகாம் தேவனுடைய தூதன் முன்பாக பேசும்போது (ஆதி. 18:27) இதோ தூளும் சாம்பலுமாயிருக்கிற அடியேன் பேசத்துணிந்தேன் என்றார். என்ன உயர்ந்த பண்பு பார்த்தீர்களா? இந்த பூமியிலே நாம் ஐசுவரியவான்களாக இருக்கலாம், I.A.S., I.P.S., மாவட்ட ஆட்சித் தலைவராக, மாநில முதலமைச்சராக ஏன்? நாட்டின் பிரதமராக இருந்தாலும் நம்மை உண்டாக்கின தேவனுக்கு முன்பாக நாம் மண் என்பதை ஏன் மறந்து விடுகிறோம். (சங்கீதம் 103:14) நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார்; நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார். **மத்தேயு 11:29 நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் ஆக பிரியமானவர்களே மனத்தாழ்மையை கிறிஸ்துவிடம் தான் நாம் கற்றுக் கொள்ள முடியும்.**

யோவான் 1:1-4 இன்று நாம் காண்கிற யாவும் கிறிஸ்துவுக்கென்றே தேவன் உண்டாக்கினார். கொலோ 1:16 சகல அதிகாரங்களும், துரைத்தனங்களும் காணப்படுகிறவைகள், காணப்படாதவைகளும் ஆகிய யாவையும்

கிறிஸ்து மூலமாகவே உண்டாக்கப்பட்டது. மத்தேயு 28:28 வானத்திலும், பூமியிலும் சக அதிகாரமும் பெற்ற கிறிஸ்து யோவான் 19ல் பிலாத்துவிற்கு முன்பாக அமைதியாக நின்றார். சிலுவைக்கு முன்பு நேரிட்ட அவமானங்களைத் தாங்கினார் இதுதான் மனத்தாழ்மை. பிலிப்பியர் 2:5-8 **தேவனுடைய சித்தம் பூமியிலே செய்ய தன்னை ஒரு அடிமை போல தாழ்த்தி கேவலமான சிலுவை மரணத்தை ஏற்றார்.** ஆண்டவர் தம் சீஷர்களுக்குத் தாழ்மையைக் கற்றுக்கொடுக்க (யோவான் 13:3-15) அவர்களுடைய கால்களை கழுவினார். இதைவிட தாழ்மைக்கு சிறந்த உதாரணம் வேறென்ன கூற முடியும் (யோவான் 6:15) (ஏசாயா 53).

பிரியமானவர்களே, நாம் தேவனுடைய பிள்ளைகள் என்கிற பெருமைக்கும் முன்பாக இந்த பூமியில் வேறெந்த பதவியும் பட்டங்களும் ஈடாகுமா? **இந்த உலகில், பெருமை, மனமேட்டிமை, அகந்தை எங்களை விட சிறந்தவர்கள் வேறு எவருமில்லை என்கிற மாம்ச எண்ணங்கள் வியாதியாக அநேகருக்குள் மிகுந்து கிடக்கிறது. நாம் இவைகளுக்கு விலகி நம்மை காத்துக் கொள்வோம்.** (1) தேவனுடைய கட்டளைகள் படி நடந்து (2) இரக்கத்தை சிநேகித்து (3) தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடந்து அவரது சித்தத்தை செய்வோம் (மத்தேயு 7:21-23) **வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்?**

அன்புடன்,

**S. பிச்சைமுத்து, தூத்துக்குடி.**

## ஜெபிக்க வேண்டுகிறோம்

**எங்களது எக்லீசியா வேதாகமக் கல்லூரியில் பயின்று 2007 பிப்ரவரியில் பட்டம் பெற்று, கடந்த 10 மாத காலமாக ஊழியப் பயிற்சி மேற்கொண்ட சகோதரர்கள் புதிய இடங்களில் ஊழியத்தை தொடங்கியுள்ளார்கள்.**

**இவர்கள் அநேக ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாகப் பெற்று, கர்த்தருடைய சபையை அந்தந்தப் பட்டணங்களில் பலமாய் ஆரம்பிக்க ஜெபியுங்கள்.**

1. **சகோ. தேவக்குமார் - அரூர், தர்மபுரி மாவட்டம்.**
2. **சகோ. பால்ராஜ் - பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்டம்.**
3. **சகோ. ஜோசப் - ஏற்காடு மலை, சேலம் மாவட்டம்.**
4. **சகோ. ஸ்டாலின் ட்விங்கிள் - துறையூர், திருச்சி மாவட்டம்.**

# ஆயிர வருட அரசாட்சி இருக்குமா?

கிறிஸ்து உலகிற்கு திரும்பி வந்து ஒரு ராஜ்யத்தை அமைத்து தாவீதின் சிங்காசனத்தில் எருசலேமிலே ஆட்சி செய்ய வரமாட்டார் என்று நிரூபிக்கும் சில காரியங்களைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. எரேமியாவின் தீர்க்கதரிசனப்படி கோனியா என்ற எகொனியாவின் சந்ததியில் வருகிற எவனும் யூதாவில் அரசாளப் போகிறதில்லை என்று (எரேமியா 22:24, 28-30) கிறிஸ்து எகொனியாவின் சந்ததியில் தோன்றினவர் (மத்தேயு 1:11,12). எனவே கிறிஸ்து யூதாவிலோ எருசலேமிலோ சிங்காசனத்தில் வீற்றிருந்து அரசாளப்போவதில்லை.

2. கிறிஸ்து மெல்கி சேதேக்கின் முறைப்படி ஒரு ஆசாரியர் (எபி 6:20) மெல்கி சேதேக் ஆசாரியனாகவும் அரசனாகவும் இருந்தான் (எபி 7:1). எனவே கிறிஸ்துவும் ஆசாரியனும் அரசனுமாகிறார். (சகரியா 6:13). பூமியிலே அவர் இருப்பாரானால் ஆசாரியராயிருக்கமாட்டார். (எபி 8:4). அவர் ராஜாவாகவும், ஆசாரியனாகவும் இருக்கிறபடியால், பூமியிலே அவர் இருந்தால் அவர் அரசனாகவும் இருக்க முடியாது.

3. வெளிப்படுத்தின விசேஷம் அதிகாரம் 20-ன்படி சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகிற எல்லாரும் (கிறிஸ்துவும் சேர்த்து) பரலோகத்தில் ஆட்சி செய்கிறவர்களே. பூலோகத்தில் அல்ல.

(அ) சிங்காசனத்தில் அமர்ந்து ஆளுகிறவர்கள் யாரென்றால் "மிருகத்தையாவது, அதன் சொரூபத்தையாகிலும் வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரைத் தரித்துக் கொள்ளாமலும் இருக்கிறவர்களைக் கண்டேன்" (வெளி 20:4).

(ஆ) "மிருகத்திற்கும் அதன் சொரூபத்திற்கும், அதின் முத்திரைக்கும் அதன் நாமத்தின் இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்" (வெளி. 15:2). "கண்ணாடிக் கடலருகே நின்றார்கள்" வெளி 20:4-ல் கூறப்பட்ட அவர்களே இவர்கள். கண்ணாடிக் கடல் கடவுளின் சிங்காசனத்தின் முன் காணப்பட்டது. அது பூலோகத்திலல்ல பரலோகத்தில் அமைந்தது. எனவே உயிர்த்தெழுந்தவர்களாக சிங்காசனத்தில் வீற்றிருந்து கிறிஸ்துவுடனே ஆட்சி செய்கிறவர்களாகக் கூறப்பட்டவர்கள் பரலோகத்தில் தான் ஆட்சி செய்கிறார்கள், பூலோகத்தில் அல்ல.

(இ) வெளி 2:3ல் கூறப்பட்ட சாத்தானின் சிங்காசனம் மற்றும் வெளி 16:10ல் கூறப்பட்ட எல்லா சிங்காசனங்களும் பரலோகத்தில் காணப்பட்டதே யன்றி பூலோகில் அல்ல. (ஒப்பிட்டுப்பார்க்க வசனங்கள் : வெளிப்படுத்தின விசேஷம் 1:4, 3:21, 4:2,5,6,9,10; 5:1,6,6,7,11,15,17; 8:3; 11:16; 14:3,5; 16:17; 19:4,5; 20:4, 11,21:5; 22:1,3).

(ஈ) "1000 வருஷங்கள் என்று கூறப்படுவது ஒரு கால அளவு மட்டும்; காரியங்களின் ஒரு நிலையே; அதனை குறிப்பிட்ட கால எல்லை என்று நாம் விளங்கிக் கொள்ள முடியாது.

வெளி 20:4, கூறப்பட்ட முதலாம் உயிர்த்தெழுதல் 20:5 இல் கூறப்பட்ட இரண்டாம் உயிர்த்தெழுதலில் பங்கு கொண்டவர்கள் சேதப் படுத்தப்படுவதில்லை" (வெளி 2:11). எவர் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லையோ அவர்களே இரண்டாம் மரணத்தினால் தேசப்படுத்தப் படாதவர்கள், அவர் மேற்கொள்ளுகிறவர்கள், ஜெயங்கொள்ளுகிறவர்கள், கர்த்தரை சேவிக்கிறவர்கள். 1000 வருஷம் என்பது கடவுளுடைய பிள்ளைகளை துன்புறுத்துகிறவர்கள் பெறும் முற்றுப்பெற்ற வெற்றியைத் தான் குறிக்கும்.

(உ) யோவான் தரிசனத்தில் கண்டு எழுதிவைத்த, கிறிஸ்துவுடனே அவரது பரிசுத்தவான்கள் 1000 வருஷம் ஆட்சி செய்கிறது என்பது எதிர்காலத்தில் வரப்போகும் ஒரு நிகழ்ச்சியல்ல. வெளி 1:1ல் கூறப்பட்டபடி சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகள்.


வெளி 1:3ல் "காலம் சமீபமாயிருக்கிறது" என்று கூறப்படுகிறது. வெளி 22:6ல் "சீக்கிரமாய் சம்பவிக்க வேண்டியவை எனப்படுகிறது வெளி 22:10 "அவர் என்னை நோக்கி இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களை முத்திரை போட வேண்டாம்". காலம் சமீபமாயிருக்கிறது என்றும் கூறப்படு கிறது. இவைகளையெல்லாம் சீர்தூக்கிப்பார்க்கும் போது ஒன்று யோவான் மூலமாகக் கடவுள் மெய்யானதைக் கூறவில்லை அல்லது அக்காரியங்கள் ஏற்கனவே நடந்து முடிந்து விட்டன என்று கூற வேண்டும். யோவான் ஆவியின் ஏவுதலால் இந்த வசனங்களை எழுதியிருக்கிறான். எனவே அவனது கூற்றே மெய் என்று கொள்ள வேண்டும்.

(ஊ) வெளி 1:5ல் கிறிஸ்து "பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி" என்று கூறுகிறது. வெளிப்படுத்தின காரியங்களுக்கு முன்னரே அவர் அரசன் என்பது கூறப்படுகிறது. கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறி பிதாவின் வலது பாரிசத்தில் இருந்து "இதோ மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர், வானத்து மேகங்களுடனே வந்தார். அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதி யாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவம் அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" (தானியேல் 7:13,14).

(எ) மேலும் இதுபற்றிய விளக்கம் : 1 கொரிந்தியர் 15:24-28-ல் தரப்படுகிறது. "எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப் போடும் வரைக்கும் அவர் ஆளுகை செய்ய வேண்டியது..." அதன் பின் முடிவு உண்டாகும் என்று வாசிக்கிறோம். இவைகள் எல்லாவற்றையும் உலகப்பிரகாரமான ஆளுகையோ ராஜ்யமோ கூறப்படவில்லை. உய்த்துண ரப்படவும் முடியாது.

வெளிப்படுத்திய விசேஷத்திலோ வேதாகமத்தின் எந்தப் புஸ்தகத் திலோ நிதரிசனமான 1000 வருஷ அரசாட்சி பூமியில் நடைபெறும் என்று கூறப்படவில்லை. ஆனால் நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம். (2 பேதுரு 3:13).

**- காலின் மேக்கீ**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

திருமறை ஆசான் இதழ் ஆசிரியரின்
திருமறை தியானம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV ஞாயிறு இரவு 9:45 மணி
தமிழன் TV திங்கள் காலை 6:30 மணி

வேதாகம
அஞ்சல் வழிக் கல்வியில்
ஒரு புதிய அத்தியாயம்

**Advanced Bible Correspondence Course**

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு
இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222955, 222555